Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 26 வெள்ளிக்கிழமை (10.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 101

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## இஸ்ரேல் ஜனாதிபதியுடன் மகிந்த சந்திப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இஸ்ரேல் ஜனாதிபதி சிமோன் பெரஸை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வரவேற்ற இஸ்ரேல் ஜனாதிபதி வெற்றிகரமான

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவின் விசேட தூதுவர் நேற்று முல்லை விஜயம்

(கொழும்பு)



அமெரிக்காவின் விசேட தூதுவர் நேற்று இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் பகுதிக்கு விஜயம் செய்தார்.

வடபகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே.ரெபிற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது யுத்த சூனிய வலயம் - 2 அமைக்கப்பட்டிருந்த புதுமாத்தளன் பாடசாலை, வைத்தியசாலை மற்றும் யுத்த காலத்தில் புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## விமானப்படைக்கு புதிய தளபதி

(கொழும்பு)

விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் கோலித குணதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான கோலித குணதிலக்க விமானப் படையின் தலைமை படை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

06




அதிகரிக்காது!

08



சாதிப்பார்

# அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்துகிறது இந்தியா



(புதுடில்லி)

மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்கு பகிர்ந்து வழங்குவதன் அவசியத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத் தை மதிக்க வேண்டும் என்றும், அதனை முழுமையாக அமுல்செய்ய வேண்டும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

காபார் சவுத் ஆசிய நியூஸ் ஏஜென்ஸிக்கு சல்மான் குர்ஷித் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கு அமையவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் அதிக அக்கறையாக உள்ளோம். இலங்கை அரசாங்கம் எமது உதவியை கேட்டது. பதிலுக்கு இந்தியாவிலுள்ளது போன்று மத்தியிலிருந்து மாநிலங்களுக்கு அதிகாரங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண அமர்வில் அங்கஜன் கன்னி உரை நிகழ்த்தினார்



(யாழ்ப்பாணம்)

தனது கன்னியுரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார் வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

வடமாகாண சபை அமர்வுகளில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முதன்முதலாக கலந்துகொண்டார். இதன்போது கன்னியுரையை ஆங்கில மொழியில் நிகழ்த்தியிருந்தார். பேரவை அமர்வுகளில் உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது தாய்மொழியிலேயே கன்னியுரையை நிகழ்த்தியிருந்த போதிலும் அங்கஜன் இராமநாதன் மட்டும் பொது மொழியான ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து உங்களது கருத்துக்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற கட்டடங்கள் மூன்று யாழ். குடாவில் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

ஆரம்பத்தில் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத் தொகுதியை பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் மற்றும் அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

159 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டடத் தொகுதியில் மாவட்ட நீதிமன்றமும், நீதவான் நீதிமன்றமும், சமுதாய சீர்திருத்தப் பிரிவும் என்பனவும் இயங்கவுள்ளதுடன், கட்டடத் தொகுதியின் பின்பகுதியில் இரண்டு நீதிபதிகளின் வாசஸ்தலங்களும், அரச சட்டத்தரணி ஒருவரின் வாசஸ்தலமும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நண்பகல் 1.00 மணியளவில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் பிரதம நீதியரசரினால் திறந்துவைக்கப்பட்டது. மல்லாகம் மாவட்ட நீதவான் சதீசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக முற்றாக அழிவடைந்த இந்த நீதிமன்றம், 176 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது

19 ஆம் பக்கம் பார்க்க

## விண்வெளி செல்கிறார் தமிழ் மாணவி



(கொழும்பு)

விண்வெளிக்கு செல்வதற்கு முதன் முறையாக தமிழ் மாணவியொருவர் பிரித்தானிய விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரித்தானியாவில் பல மாணவர்கள் விண்வெளி தொடர்பாக

19 ஆம் பக்கம் பார்க்க

## நியமனங்களை நிறுத்த மாகாணசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அட்டவணைப்படுத்தப்படாத நியமனங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என வடமாகாண சபை அமர்வில் நேற்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தான்தோன்றித்தனமாக அட்டவணைப்படுத்தப்படாத நியமனங்கள் வழங்கப்படுகின்றன. வரும் 16 ஆம் திகதி கூட நியமனம் வழங்கப்படவிருக்கிறது. வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்படும் நியமனங்கள், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் தகுதியானவர்களுக்கு வழங்கப்படவில்லை. சாரதி நியமனம் பெற்ற ஒரு சாரதி வாகனத்தை செலுத்தமுடியாது விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இலகு வாகன அனுமதிப்பத்திரம் உள்ள ஒருவருக்கு நோயாளி காவுவண்டி செலுத்தும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நியமனங்கள் வழங்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்றைய தினம் பட்டம் பெறுபவர்களின் விபரம் உள்ளே

# சுகாதார ஊழியர் பணிப்புறக்கணிப்பு; ஆளுநருடன் தொழிற்சங்கம் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக நான்கு அம்சக்கோரிக்கையை முன்வைத்து வவுனியா நகரசபை, பிரதேச சபைகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் பணியாற்றிவரும் தொழிலாளர்கள் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் நிலையில், இவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் அகில இலங்கை பொது ஊழியர் சங்கப்பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.



நேற்று நண்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கருத்துத்தெரிவித்த ஆளுநர், தற்கால ஆளணி குறித்து உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபை செயலர்கள் எதுவும் தெரியப்படுத்தவில்லை. எனவே இந்த விடயம் குறித்து அவர்களுடன் கலந்துரையாடி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டவர்களை நிரந்தரமாக்குவதற்கு முயற்சி செய்வதாக உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தலைவர் எஸ். லோகநாதன், பிரதித்தலைவர் க.அன்ரனி, யாழ்.மாவட்ட இணைப்பாளர் மு.மகேஸ்வரன், பொது ஊழியர் சங்க வவுனியா இணைப்பாளர் எஸ்.சித்திரன், யாழ்.மாவட்ட நகரசபை தொழிற்சங்க இணைப்பாளர் ஜோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இந்த விடயம் குறித்து இன்றைய தினம் வடமாகாணசபை அதிகாரிகள் மற்றும் வவுனியா நகரசபை செயலாளர்களுடன் நடத்தப்படவுள்ள பேச்சில் சாதகமான உறுதிமொழியளிக்கப்பட்டால் போராட்டம் கைவிடப்படும். இல்லையெனில் பணிப்புறக்கணிப்பு தொடருமெனவும் பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (140)

# மண்டைதீவு கிராமிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சை மட்டுமே!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மட்டுமே இயங்கவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுமார் 26 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இவ்வைத்தியசாலையின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளதாக தெரிவித்த அவர் வரும் ஒருமாத காலப்பகுதியில் இவ்வைத்தியசாலை திறந்துவைக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தெல்லிப்பளை வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்துவைக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்சமயம் தெல்லிப்பளை வைத்தியசாலையில் புற்றுநோய் கிசிச்சைப்பிரிவின் ஒருபகுதி இயங்கிவரும், நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் இந்தப்பிரிவிற்கான விடுதிகளும் தற்சமயம் அங்கு மாற்றப்பட்டு இயங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# வர்த்தக கண்காட்சிக்காக தயாராகும் துரையப்பா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் யாழில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் தயாராகிவருகிறது.

வருடாவருடம் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்காக யாழ். துரையப்பா அரங்கு இம்முறை தெரிவுசெய்யப்பட்டு பிரமாண்ட கொட்டகைகள் அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

இக்கண்காட்சி இன்னும் [illegible] நாட்கள் உள்ள நிலையில், மிகவும் துரிதகதியில் இங்கு பணிகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கண்காட்சிக்காலங்களில் பல நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை மற்றம் அறிமுகம் என்பன இடம்பெறவுள்ளதோடு இசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ர)

# "ஞானச்சுடர் மலர்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்துள்ள சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் மார்கழிமாத மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலரில் தைப்பூச நன்னாள், அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையார் சைவத்திருக்கோயிற் கிரியைநெறி, ஆன்மிகம் மிளிரும் ஆன்மிகக் கதைகள் ஆகிய ஆன்மிக அம்சங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

# அடுத்த அமர்வு 27 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் அடுத்த அமர்வு இம்மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வு பிற்பகல் 2.30 மணியளவில் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தினால் ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அமர்வுகள் இடம்பெறும் என அறிவித்தார். (இ)


பெயர் : லோ.அஸ்வினி
முகவரி : வேலணை கிழக்கு துறையூர்.
அகவை 7 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# வாராந்த சொற்பொழிவு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப்பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ப[illegible]தித்துறை ஸ்ரீ சாரதா சேவாக்கிராம சுவாமி சித்தரூபானந்தா 'கருதாமறலா நெறி' என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

# ஏகாதசி தீர்த்தம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் நாளை சனிக்கிழமை சுவர்க்கவாசல் ஏகாதசித்தீர்த்தம் .பக்தி பூர்வமாக அனுஸ்டிக்கப்படவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிக்கு சிறப்புச் சமய சொற்பொழிவு நடைபெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று ஸ்ரீ மத் நாராயணசுவாமி, ஸ்ரீ தேவி பூமாதேவி புடைசூழ திருவீதி எழுந்தருள்வார் மதியம் 12 மணிக்கு அடியார்களுக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

# பொங்கல் பொதிவழங்கல்

தெல்லிப்பழை பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் தனது அங்கத்தவர், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு பொங்கல் பொதியினை வழங்கவுள்ளது.

இதன்படி ஒவ்வொன்றும் ரூபா 600 பெறுமதியான பொருட்கள் இலவசமாக இன்றும்; நாளையும் வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

# மந்தகதியில் இடம்பெற்றுவரும் கலாசார மண்டபப் பணிகள்

(கொடிகாமம்)

வரணிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டப பணி மந்தகதியில் நடைபெற்றுவருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒன்றறை வருடங்களுக்கு முன்னர் வேலை தொடங்கிய போதும் இன்னமும் வேலை நிறைவடையவில்லையென்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்து கட்டடப்பணிகள் துரித கதியில் இடம்பெறவேண்டும் எனவும் அவசர கோரிக்கை விடுக்கின்றனர்.

வரணிப்பகுதியில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் பல்வேறு கஸ்ரங்களுக்கு மத்தியில் இடம்பெறுதாகவும், இவ்கலாசார மண்டப பணி நிறைவுபெற்றால் வரணி பகுதியில் கலை, கலாசார நிகழ்வுகளை இவ் மண்டபத்தில் நடாத்தலாம் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பொது மக்களின் நலன் கருதி யாவது வரணி கலாசார மண்டப பணியினை நிறைவுசெய்து கலாசார மண்டபம் இயங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல 2494 திகதி 08-01-2014

ஆங்கில எழுத்து: P

வெற்றி எண்கள் 11 21 29 66

போனஸ் இல: 25

ஜக்பொட் பரிசு ரூ.21,950,150/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 252708 | 20/- | 5,054,160/- |
| 2 இல | 18194 | 100/- | 1,819,400/- |
| 3 இல | 375 | 1,000/- | 375,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10025 | 40/- | 401,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 676 | 1,000/- | 676,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 21,950,150/- | 21,950,150/- |
| 1 இல + போனஸ் இல | 11982 | 100/- | 1,198,200/- |
| 2 இல + போனஸ் இல | 572 | 500/- | 286,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 494 | 200/- | 98,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 295068 | | 33,712,710/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.01.11 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3266)

# இந்து பல்கலைக்கழகம் தெல்லிப்பளையில் அமையவேண்டும்

## யாழ்.பல்கலை வரலாற்றுத்துறை பேராசிரியர் வலியுறுத்து

(திருநெல்வேலி)

தெல்லிப்பளையில் இந்துப் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா தெரிவித்துள்ளார்.

துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மருங்கில் இந்து கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் இந்துப் பல்கலைக்கழகம் அமையப்பெறுவதற்கு ஏற்ற சூழல் நிறைந்து காணப்படுவதினால் அதனைத் தெல்லிப்பளையில் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் பரமலிங்கம் என்னும் அன்பரினால் பல மாடிகளைக் கொண்ட தனியார் பல்கலைக்கழகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. பல்துறைகளையும் சார்ந்த மாணவர்கள் வசதியுடன் கல்வி கற்பதற்கான செயற்பாடுகள் இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

இலங்கையில் பதினைந்து பல்கலைக்கழகங்கள் இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு பல்கலைக்கழகமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு பல்கலைக்கழகம் இந்துப் பல்கலைக்கழகமாக தெல்லிப்பளையில் உதயமாக வேண்டும் எனப் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா தெரிவித்துள்ளார். இதற்கான சகல ஒத்துழைப்பையும் அனைவரும் வழங்க வேண்டும் எனவும் வேண்டுதல் விடுத்துள்ளார். (137)

# இளவாலைப் பகுதியில் தங்கநகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் வயதான பெண் தங்கியிருந்த வீடொன்றில் நகைகள் உட்பட்ட பொருட்கள் பல திருட்டுப் போயுள்ளதாக இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.இளவாலை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து தங்கநகைகள் உள்ளிட்ட சுமார் 97,800 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக அவ்வீட்டு உரிமையாளர் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த வீட்டு உரிமையாளரான வயதான பெண்ணான விக்னேஸ்வரன் இராசியம்மா (வயது 68) கொழும்பிலுள்ள மகளின் வீட்டிற்கு கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் திகதி சென்று கடந்த செவ்வாய்க்கிழமை தனது வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்த போது, வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு சங்கிலி, கைச்சங்கிலி, தோடு, 02 மணிக்கூடுகள் உட்பட பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை இளைவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (48)

# வாழ்வக ஸ்தாபகரின் உதயநாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வாழ்வக ஸ்தாபகர் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும் நாளை சனிக்கிழமை முற்பகல் 8.45 மணிக்கு சுன்னாகம் வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலர் திருமதி செலின் சுகந்தி செபஸ்தியான் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனிய தெற்கு வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகரும் சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்ற ஆட்களுக்கான தேசியசபை உறுப்பினர் வெ.சுப்பிரமணியம், ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் க.இந்திரவாசன், யாழ்.பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வ.சுரேஸ்குமார், யாழ்.ஆசிர்வாதம் புத்தகசாலை உரிமையாளர் ஜே.எஸ்.அலெக்ஸ் நிக்ஷன் ஆகியோரும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அல்லைப்பிட்டி வெண்புரவிபாதை பிரதேச சபை தவிசாளர் பார்வை



(வேலணை)

புறநெகும திட்டத்தில் புனரமைக்கப்படவுள்ள அல்லைப்பிட்டி வெண்புரவி குடியிருப்புக்குச் செல்லும் பாதையை வேலணை பிரதேச சபைத் தவிசாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட குருநகர் பகுதியிலிருந்து குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான பகுதியே அல்லைப்பிட்டி வெண்புரவி குடியேற்றப்பகுதி. கடந்த தேர்தல் காலங்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேலணை பிரதேச சபைத் தவிசாளரிடமும் நேரடியாக மக்கள் தெரிவித்ததற்கிணங்க மேற்படி வீதியானது புறநெகுமதிட்டத்தில் உள்வாங்கப்பட்டு தற்பொழுது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது திருத்தப்பணிகளுக்காக மேற்படி வீதியை சிறப்பாக புனரமைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பை வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) கேட்டுள்ளார்.

# உண்மை விழுங்கிகளால் ஆன ஒப்பாரிச் சமூகம்...!




உண்மை விழுங்கிகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவர்களைப் பற்றி தெரியாதென்று நீங்கள் சொல்ல முடியாது. உங்களுக்கு நிச்சயமாக உண்மை விழுங்கிகளைத் தெரியும்.

நாட்டிலே நடக்கின்ற, ஊரிலே நடக்கின்ற ஏராளம் விசயங்களை – பல உண்மைகளை இவர்கள் விழுங்கி விடுகிறார்கள். உண்மையை விழுங்கினால் மிஞ்சுவது என்ன? பொய்தானே! ஆகவே, உண்மையை விழுங்கி விட்டு பொய்யை பரப்புகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் உள்நோக்கம் தான். அரசியல் என்றால் சும்மாவா? பொய், புரட்டு. சுயநலம், ஏமாற்று, தந்திரம், அதிகாரவெறி, துரோகத்தனம், அநியாயம் என்ற சரக்குகளை கலந்து வைக்கும் ஒரு கூட்டு.

இந்தச் சரக்குகள் இல்லாமல் எப்படி அரசியல் செய்வது? என்று கேட்கிறார்கள் இன்றைய அரசியல் தலைவர்கள்.

நாக்கில் கூச்சமில்லாதவர்கள் பொய் சொல்லத் தயங்க மாட்டார்கள். நாக்கில் கூச்சம் என்பது மனச்சாச்சியின் விழி திறப்பே. மனச்சாட்சியின் கதவுகளை இறுகச் சாத்திய பின் எதற்காக கவலைப்பட வேண்டும்? யாருக்கு அஞ்ச வேண்டும்?

எனவே, உண்மைகளை விழுங்கி பொய்களைப் பரப்பும் காரியம் நடக்கின்றது. ஏனென்றால், உண்மையையும் விட பொய்தான் கவர்ச்சி கூடியது. எட்டு நாள் புழுகு என்றாலும் கெட்டிக்காரனுக்கு அது போதும். அதற்குள் ஆகவேண்டிய காரியத்தைப் பார்த்து விடலாம் என்ற எண்ணம்.

ஆகவே, உண்மை, நேர்மை, மக்கள் மீதான கரிசனை சமூக விசுவாசம், கொள்கைப் பிடிப்பு, குறிக்கோள், அர்ப்பணிப்பு பொது மனப்பாங்கு, பிறரையும் பிறருடைய கருத்துக்களையும் மதித்தல் என்ற எல்லாவற்றையும் தூக்கி குப்பைக் கூடையில் போட்டாயிற்று.

உண்மைகளோடு வாழ்வதும் உண்மையாக வாழ்வதும் இன்று பெரும் சவாலான விசயம். உண்மையோடு வாழவேண்டுமென்றால் அல்லது உண்மையாக வாழ வேண்டுமென்றால் அதற்காக கடுமையான தியாகம் செய்ய வேண்டும். நேர்மையாக நடக்க வேண்டும். இழப்புகளைச் சந்திக்க வேண்டும். எதிர்பார்த்த வெற்றிகளோ உடனடி இலாபங்களோ கிடையாது.

ஆனால், பொய்யை விற்பவர்களுக்கு எல்லாமே உடனடியாகக் கிடைக்கின்றன. அது கவர்ச்சிகரமான ஒரு பண்டமாக இருப்பதால் அந்த இலாபத்தை பொய்யை விற்போர் பெற்றுக்கொள்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுகின்ற புலுடாக்களும். சொல்லுகின்ற பொய்களும் ஒன்றல்ல, இரண்டல்ல. கூட்டமைப்பினுடைய அறிக்கைகளையும் அவர்களுடைய அரசியல் செயற்பாடுகளையும் ஒருவர் தொடர்ந்து அவதானித்து வந்தால் இந்த ஏமாற்றுகளை இலேசாக அடையாளம் காணலாம். அதைப்போல அரசாங்கத்தரப்பிலும் கணிசமான பொய்யுரைப்புகளும் புளுகு மூட்டைகளும் உண்டு. ஏமாற்றுகளும் தந்திரங்களும் உண்டு.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளைவிட அது குறைவானதே.

நாட்டிலே எவ்வளவோ நல்ல காரியங்கள் நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள தமிழ்த் தேசிய சக்திகளின் மனம் ஒப்புவதில்லை.

அவர்களுடைய கண்களில் படுவதெல்லாம் குறைகளும் பிரச்சினைகளுமே.

நல்லவற்றை அறிய முடியாத நஞ்சு மனம் படைத்தவர்கள் அவர்கள். அகவிழி இருண்ட தபோதரர்கள்.

எனவே, உண்மைகளை விழுங்கி பொய்யை உரைக்கிறார்கள். இந்த நாடு புழுத்துப் போயிருக்கின்றது என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரைக் கண்டாலும் ஒப்பாரி. எதைக் கண்டாலும் ஓலம். வெளியே தலைகாட்டவே வெட்கக்கேடு என்ற அளவுக்கு ஓயாத புலம்பல்.

இப்படி ஒப்பாரி வைத்து வைத்தே ஒரு ஒப்பாரிச் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் ஆகிவிட்டது.

இந்த ஒப்பாரி தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இளைய தலைமுறையைச் சேர்ந்த அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், படைப்பாளிகள், புத்திஜீவிகள் போன்றோரிலும் பெரும்பாலானவர்கள் ஒப்பாரிக்காரராகவே உள்ளனர்.

ஒப்பாரி வைக்க வைக்க, பொய்யை உரைக்க உரைக்க அவை நன்றாக விலைபோகின்றன உள்ளூரிலும் வெளியரங்கிலும்.

ஆனால், இந்த விற்பனையின் இலாபமெல்லாம் தனிப்பட்ட முறையில் இந்தச் சிறுவட்டத்தினருக்கே கிடைக்கின்றன. ஏனையோருக்கு எதுவுமேயில்லை.

ஆகவே, உண்மை விழுங்கிகள் இன்று உண்மையை விழுங்குவதை ஒரு தொழிலாகவே செய்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் இது உண்மை விழுங்கிகளின் காலம்.

உண்மை விழுங்கிகளின் காலத்தை பிசாசுகளின் காலம் என்றும் சாத்தானின் ஆட்சி என்றும் சொல்வதுண்டு.

தமிழிலும் ஒரு பழமொழி உண்டு. 'உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுதல் நல்லதல்ல, நல்லதேயல்ல' என்று.

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால்தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும். - சீனப் பழமொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## காத்திருந்து... காத்திருந்து...

வருடா வருடம் சளைக்காமல் நமக்குக் காட்டப்பட்டு வருகின்ற நம்பிக்கையால், இம்முறையாவது ஏதோ நடக்கத்தான் போகுது என்று காத்திருந்த, எங்களுடைய ஜெனீவா மாநாட்டு எதிர்பார்ப்பில் முதல் கைப்பிடி மண்ணை அள்ளிப் போட்டு விட்டுப் போயிருக்கிறார் அமெரிக்காவின் விசேட தூதுவரான ஸ்ரீபன் ராப்.

இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் பிரேரணையைக் கொண்டுவருவது இலகுவான காரியமல்ல எனவும், அதற்கான ஆதரவை சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்குமெனவும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர் தெரிவித்திருக்கிறார்.

சிரியாவின் விடயத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவை சுட்டிக்காட்டிய ஸ்ரீபன் ராப், இலங்கை விடயத்தில் அதைவிடவும் நிறைய சர்வதேச சட்ட சிக்கல்கள் இருக்குமெனவும் சொல்லிச் சென்றுள்ளார்.

ஏற்கனவே நவநீதம்பிள்ளை அவர்களும் பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூனும் இலங்கைக்கே வந்து, இந்த அரசாங்கத்தை ஒரு கை பார்க்கத்தான் போகிறோம் என்று சொல்லி விட்டுச் சென்றதன் மூலம் நம்பிக்கையை ஒரு படி மேலே எகிற வைத்திருந்தார்கள்.

அதனால் கடந்த இரண்டு வருடங்களிலும் ஊட்டப்பட்ட நம்பிக்கை பொசுபொசுத்துப்போன ஏமாற்றத்தையும் பொருட்படுத்தாமல், 'சர்வதேச அழுத்தம் மெல்ல மெல்ல அதிகரித்திருக்கிறது,' இலங்கை விசாரணைக்குள்ளாகித் தண்டிக்கப்பட காலம் கனிந்து வருகிறது' என்று கொஞ்சம் கூடுதலாகவே எதிர்பார்ப்பை வளர்த்துவிட்டோம்.

ஆனால், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்ட அமெரிக்க விசேட தூதுவர், இம்முறையும் அந்த அலுவல் சறுகும் என்பதுபோல சொல்லிவிட்டுப் போயிருப்பது துணுக்குறச் செய்வதாக இருக்கிறது. ஜெனீவாவில் பெரிதாக ஒன்றும் நடக்காது என்பதுதான் அவர் உணர்த்தும் செய்தி.

இருந்தாலும், நம் தலைவர்களும் தமிழ் ஊடகத்தினரும் அவ்வாறு துணுக்குறவோ சோர்வுறவோ நம்மை விட்டுவிட மாட்டார்கள். நரியும் திராட்சைப் பழமும் கதையில்தான் சில முறை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு "இந்தப்பழம் புளிக்கும்" என்று நரி அதை விட்டுவிட்டு வேறு பழத்திற்கு முயற்சிக்கும். நம்மவர்களோ சும்மா எட்டி எட்டிப் பாய்ந்து கொண்டிருப்பதே நமது மக்களுக்குப் போதும் என்று படம் காட்டி ருசி கண்டவர்களாயிற்றே!

சர்வதேச விசாரணை நம்பிக்கையையே ஒரே அரசியலாகப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் நம் தலைவர்களைப் பார்த்துவிட்டு, பரிதாப உணர்ச்சி கொள்ளும் சர்வதேசப் பிரதிநிதிகள் சிலர் இவ்வாறு நாசூக்காக உண்மை நிலைமையை உணர்த்திவிட்டுப் போக முயற்சிக்கின்றனர்.

நம் கூட்டமைப்புத் தலைவர்கள் மட்டுமல்லாது அவர்களது ஊடகங்களும் அதொன்றும் விளங்காதது மாதிரியே நடிக்கின்றன. "சேச்சே, வேறொருவர் வந்து விசாரணை நடக்கும் என்பதைச் சொல்லுவார், இருந்து பாருங்கள்" என்று மக்களைக் காத்திருப்பிலேயே வைத்திருந்து நாட்களைக் கடத்த அவர்களுக்குத் தெரியும்.

இந்த முறை சறுக்கினால் என்ன? அடுத்து 2015 இலும் ஜெனீவா கூட்டத்தொடர் நடைபெறும்தானே? "இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையில் மாட்டட்டும், அதற்குப் பிறகுதான் நமக்குத் தீர்வு!" என்று தொடர்கிறது இந்த நாடகம்.

சர்வதேச விசாரணையில் மாட்டுவது எப்போ நடக்கும்? சரி, மாட்டினால் எப்படித் தீர்வு வரும்?

அதொன்றும் தெரியாமலே இப்படிக் காத்திருப்பதுதானா எங்களுக்குத் தெரிந்த அரசியல்? - ஆசிரியர்

# ஐ.தே.க.வை ஆக்கிரமித்துள்ள பெண் அனகொண்டாக்கள்

### என்கிறார் வடமேல்மாகாண முதலமைச்சர்

மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திறமையானவர்களை களத்தில் இறக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி பெண் அனகொண்டாக்களை களத்தில் இறக்குவதாகவும் இந்தப் பெண்கள் கட்சியில் உள்ள ஆண் அனகொண்டாக்களை விழுங்கி வருவதாகவும் வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தற்பொழுது பெண் அனகொண்டாக்களின் அரசியலாக மாறிவிட்டது.ரணில் விக்ரமசிங்க அரபு புரட்சியை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார். புரட்சியை கொண்டு வரும் முன்னர் அவர் மக்களுடன் இருக்க வேண்டும்.

மேற்குலக சார்பாளர்களே அரபு புரட்சியை ஏற்படுத்தினர். அரபு புரட்சி ஏற்பட்ட நாடுகளாக லிபியா மற்றும் எகிப்து நாடுகள் இன்று கெரில்லாக்களுடன் சண்டையிட்டு வருகின்றன.

இந்த நாடுகள் வெறும் பொம்மை ஆட்சியாளர்களின் நாடுகளாக மாறி விட்டன. இந்த புரட்சியையே ரணில் விக்ரமசிங்க இலங்கையில் ஏற்படுத்த முயற்சித்து வருகிறார் என்றார்.

# விளையாட்டு அமைச்சர் மீது மனைவி மீண்டும் குற்றச்சாட்டு

விளையாட்டுத்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளருமான மகிந்தானந்த அளுத்கமகேயிடம் விவாகரத்து கோரியுள்ள மனைவி மீண்டும் தனது கணவர் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சர் தனக்கு எதிராக விடுத்த கொலை அச்சுறுத்தல் தொடர்பில் தான் செய்த முறைப்பாடு குறித்து நம்பிக்கையான விசாரணைகள் நடத்தப்படவில்லை என அளுத்கமகேயின் மனைவி கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தான் மேற்கொண்ட முதலாவது முறைப்பாட்டின் பின்னரும் தனக்கு எதிராக தொடர்ந்தும் அமைச்சர் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக அவர் முறைப்பாட்டில் கூறியுள்ளார். இதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் குடும்ப வாழ்க்கையில் பிரச்சினை ஏற்பட விளையாட்டுத்துறை அமைச்சின் பெண் அதிகாரி ஒருவருக்கு தொடர்பிருப்பதாக கூறப்படுகிறது.

# ஊடகவியலாளர்களின் தேவைகள் அடையாளம் காண நடவடிக்கை

### ஊடக அமைச்சர் தெரிவிப்பு

ஊடகவியலாளர்களின் தேவைகளை அடையாளங்காணும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இம்முறை வரவு செலவு முன்மொழிவில் கலைஞர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் வழங்கப்படவுள்ள சலுகைகள் தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்த விடயங்களுக்கமைய அந்த சலுகைகளை அடையாளங்காணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக அமைச்சின் ஊடக இணைப்பு மத்திய நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த மத்தியநிலையத்தினூடாக மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களின் தேவைகள் தொடர்பாக பணியாற்ற முடியும் அதனூடாக ஊடகவியலாளர்கள் அவசியமான இணைப்பு உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் எதிர்காலத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இவ்வாறான இணைப்பு அலுவலகங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம் என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மத்தியமாகாண முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட பல மக்கள் பிரதிநிதிகள், கண்டி மேயர் எச்.எம்.காமினி செனவிரத்ன உட்பட பல அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# மாணவர்களின் கைகளில் புதியவகை போதைப்பொருள்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை பாவனையில் இருந்து கண்டுபிடிக்கப்படாத புதிய வகை போதைப் பொருளை கண்டி பிராந்திய பொலிஸ் நிலையத்தின் மோசடி தடுப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

கண்டியில் உள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக தெரியவருகிறது.

ஹெரோயின் அல்லாத இந்த போதைப் பொருள் பாடசாலை மாணவர்கள் மற்றும் சில யுவதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப் பொருள் கலந்த கோகோ பவுடர் போன்ற வர்ணத்தில் இந்த போதைப் பொருள் காணப்படுவதாகவும் இது 150 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வங்குரோத்து நிலையில் இலங்கை மத்தியவங்கி

### கூறுகிறார் மங்கள எம்.பி.

இலங்கை மத்திய வங்கி வங்குரோத்து அடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி, உண்டியல்களை உடைத்து பணம் எடுக்கும் அளவிற்கு வங்குரோத்து அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வழிபாட்டுத் தலங்களில் காணப்படும் உண்டியல்களில் இலங்கை நாணயக் குற்றிகள் காணப்படுவதாகவும் அவற்றை மீள இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்திருந்தார்.

10 முதல் 15 தொன் எடையுடைய நாணயக் குற்றிகள் இவ்வாறு இந்திய உண்டியல்களில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த நடவடிக்கையானது மத்திய வங்கியின் வங்குரோத்து நிலைமையை பிரதிபலிப்பதாக மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

உண்டியல்களை உடைத்து பணத்தை எடுப்பதனை விடவும், வெளிநாட்டு வங்கிகளில் இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளினால் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தை மீள எடுத்துக்கொள்ள திறைசேரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கை ஆயுத மோதலில் பொதுமக்கள்

## நெவில் லத்துவஹெட்டி கட்டுரையிலிருந்து

இலங்கையின் எதிர்ப்பாளர்கள், இறுதிக்கட்ட மோதல்களின் போது (2009 ஜனவரி முதல் மே வரை) நடத்தப்பட்ட மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கிறார்கள். இந்தக் கோரிக்கையில் ஆதிக்கம் செலுத்தும் விடயங்கள் பின்வருமாறு:

* இந்தக் காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

* தாக்குதலற்ற பாதுகாப்பு வலயத்தினுள் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு.

* தாக்குதலற்ற பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகளை மறுத்ததுடன், வேண்டுமென்றே அவர்களின் எண்ணிக்கையை குறைத்து மதிப்பிட்டது.

பொதுமக்கள் மற்றும் போரில் நேரடியாக பங்குபற்றுபவர்கள் இடையேயான வேறுபாட்டை அறிவதில் சிக்கல் உள்ளதால் தாக்குதலற்ற வலயம் தொடர்பான சட்டங்கள், மற்றும் மனிதாபிமான உதவிகளை மறுத்தல் போன்ற விடயங்கள், கிளர்ச்சிகள் மற்றும் உள்நாட்டு கலவரங்கள் போன்ற விடயங்களில் எழுப்ப முடியாது. அப்படியான விடயங்கள் எழுவது, சர்வதேச அல்லது சர்வதேசமற்ற யுத்தச் சட்டங்கள் பிரயோகிக்கப்படும் ஆயுத மோதல்களில் மட்டுமே. எனவே மேலே இலங்கையால் இறுதிக்கட்ட மோதலின்போது மேற்கொள்ளப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ள மீறல்கள் யாவும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களால் ஆட்சி செலுத்தப்படும் சர்வதேசமல்லாத ஆயுத மோதல்களில் பிரயோகிக்கப்படும் யுத்தச்சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் படியே விசாரணை செய்யப்பட வேண்டும், அதற்கான பாதுகாவலராக இருப்பது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே (ஐ,சி.ஆர்.சி).

சர்வதேச மனிதாபிமான சட்டத்தில் பிரதானமான பிரச்சினையாக இருப்பது, ஒரு நபரை பொதுமகன் என வரையறை செய்யும் தகுதிக்கான காரணிகள். மோதலில் ஈடுபடும் கட்சிகள் தமது எதிர்த்தரப்பு படைகளை தோற்கடிப்பதற்காக வேண்டுமென்றே பொதுமக்களை தீங்கான வழியில் ஈடுபடுத்தாமல் தங்களது வியூகங்களை வகுத்துக் கொள்ள வேண்டும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டனவா அல்லது இல்லையா என்கிற பிரச்சினை தோன்றும்போது, வழக்கமான போராளிகளிலிருந்து அல்லது ஆயுதக் குழுக்கள் மற்றும் மோதல்களில் நேரடியாக பங்குபற்றுபவர்களிலிருந்து பொதுமக்களை வேறுபடுத்திக் காணும் பிரச்சினை மிக முக்கியமான ஒன்றாக வருகிறது.

பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் அல்லாதோர் இடையேயான வேறுபாட்டை காணும் பிரச்சினை வழக்கறிஞர்கள் மற்றும் கல்விமான்கள் மத்தியில் மிகவும் விவாதம் மற்றும் கலந்துரையாடலுக்கு உரிய ஒரு விடயமாகவே இருந்து வருகிறது. ஆறு வருடங்களாக மேற்கொண்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஆராய்ச்சிகளின் பின் 2009இல் ஐ.சி.ஆர்.சி "சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் மோதல்களில் நேரடி பங்கு பெறுபவர்கள் என்கிற கருத்துக்கு பொருள் விளக்க வழிகாட்டல்" என்கிற தலைப்பில் ஒரு ஆவணத்தை வெளியிட்டுள்ளது. (ஏசர் நிறுவனம் ஏப்ரல் 2004)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆவணம் இறுதி தீர்மானமாகத் தெரிவிப்பது: "சர்வதேசமல்லாத ஆயுத மோதல்களில் வேறுபடுத்தும் கொள்கையின் நோக்கம், எல்லா நபர்களும் அரச ஆயுதப்படையின் அங்கத்தவர்கள் அல்ல, அல்லது மோதலில் ஒரு கட்சியாகவுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுதக் குழுக்களில் உள்ளவர்கள் எல்லோருமே பொதுமக்களும் இல்லை, ஆகவே அப்படியான ஒரு நேரத்தில் அவர்கள் நேரடியாக மோதல்களில் பங்கெடுக்காத போது நேரடித் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அவாகள் உரித்துடையவர்கள் ஆவார்கள். சர்வதேசமல்லாத ஆயுத மோதல்களில், ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதக்குழுக்கள் அரசாங்கமல்லாத .ஒரு கட்சியின் ஆயுதப்படைகளையே மோதலில் கொண்டுள்ளது மற்றும் போரில் நேரடியாகப் பங்கு பற்றுவதைப் பணியாகக் கொண்ட தனி நபர்களையே அது கொண்டுள்ளது"

இலங்கை விடயத்தில் சீருடை அணிந்திருந்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் ஒழுங்கமைவான ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள், எனவே மற்றவர்களில் இருந்து வேறுபடுத்தக் கூடியதாக இருந்தது. தங்கள் சீருடைகளை களைந்துவிட்டு தொடர்ந்து மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களும் உள்ளார்கள். இதற்கும் மேலாக எல்.ரீ.ரீ.ஈ பலவருடங்களாக பொதுமக்களை போராட்டப் பணிக்காக பயிற்சியளித்தும் வந்துள்ளது. இறுதிக் கட்டப் போரில் அவர்களில் எத்தனை பேர்கள் மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்துள்ளார்கள் என்பதை தத்ரூபமாக அறுதியிட்டுச் சொல்லமுடியாது. மற்றவர்கள் "உண்மையான வன்முறைப் பயன்பாட்டை விட்டு விலகியிருந்ததால்" மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்தவர்களாகிறார்கள். கூட்டாக மேற்குறிப்பிட்ட வகையை சேர்ந்தவர்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் உள்ள பிரிவுகளின் படி பாதுகாப்புக்குத் தகுதியற்றவர்களாகிறார்கள்.



**யுத்த வலயத்தில் இருந்த பொதுமக்கள் மத்தியில் எல்.ரீ.ரீ.ஈ யின் பிரசன்னம் ஒரு தீவிரமான சவாலை ஏற்படுத்தி இருந்தது, எல்.ரீ.ரீ.ஈ பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது மற்றும் அரசாங்கப் படைகளுக்கு எதிராக கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது போன்றவை இதில் அடங்கும்: இதற்கான மறுக்க முடியாத ஆதாரங்கள் நிறைய உள்ளன. எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடுகளின் விளைவு, பொதுமக்களின் பாதுகாப்பை மட்டும் நிராரிக்கவில்லை ஆனால் அவர்களின் முன்னிலையில் பொதுமக்களை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட வைத்ததின் மூலம் அவர்களுக்குத் தீவிரமான தீங்கினை விளைவிக்கவும் வகை செய்தது. எனவே சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் தாக்குதலற்ற பாதுகாப்பு வலயம் அதற்குத் தேவையான தரங்களை கொண்டிருக்கவில்லை.**

இருந்தும் மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்தவர்கள் எத்தனைபேர் என்று யாராலுமே துல்லியமாகக் கணித்துக்கூற முடியாதபடியால், சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் தரத்தின்படி கொல்லப்பட்டவர்களில் எத்தனைபேர் பொதுமக்கள் என்று உறுதிப்படுத்திச் சொல்வது சாத்தியமில்லை, மற்றும் அவர்களில் எத்தனை பேர் பொதுமக்கள் என்ற வகையில் கூட பாதுகாப்புக்குத் தகுதியற்றவர்கள் என்பதும் தெரியாது.

இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்கிற கூற்று பல வர்ணனையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களினால் சவால் விடப்பட்டுள்ளது. சவால்விடுப்பவர்கள் அவர்களின் கருத்தை அனுமானிக்கும் வகையில் மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்தவர்களில் ஒரு பொதுமகனையாவது தெளிவாகஅடையாளம் காண்பதற்கு மற்றும் மோதலின் விளைவுகள் காரணமாக பொதுமகனுக்கு உரிய பாதுகாப்பினை பெற அருகதையற்றவர்கள் அவர்களில் யார் என்பதை கண்டுபிடிக்கவும் திறன் அற்றவர்களாவார்கள்.

ஒரு ஒழுங்கமைவான ஆயுதக் குழுவின் தனியான ஒரு அங்கத்தவருக்குரிய உறுதியான அளவுகோல் என்பது, அந்த நபர் அந்தக் குழுவிற்கான தனது தொடர்ச்சியான செயற்பாட்டை வழங்குவதற்காக போரில் அவன் அல்லது அவள் நேரடியாக பங்கேற்பது ஆகும். (ஐ.சி.ஆர்.சி), எனவே பொதுமக்கள் என அழைக்கப்படுபவர்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் எண்ணிகை நிச்சயமாக கற்பனை மற்றும் அனுமானங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதாகும், ஏனெனில் மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்தவர்களில் கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை சரியாக நிறுவும் நிலையில் எவருமில்லை. எனவே இறுதிக் கட்டப் போரின்போது பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதால் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டுள்ளன என்கிற குற்றச்சாட்டை நியாயமான முறையில் நிராகரிக்க வேண்டும்.

யுத்த வலயத்தில் இருந்த பொதுமக்கள் மத்தியில் எல்.ரீ.ரீ.ஈ யின் பிரசன்னம் ஒரு தீவிரமான சவாலை ஏற்படுத்தி இருந்தது, எல்.ரீ.ரீ.ஈ பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது மற்றும் அரசாங்கப் படைகளுக்கு எதிராக கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தி இரர்ணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது போன்றவை இதில் அடங்கும்: இதற்கான மறுக்க முடியாத ஆதாரங்கள் நிறைய உள்ளன (ஊழல் மலிந்த ஊடகவியல் - சனல் 4 மற்றும் இலங்கை, இலங்கை தொடர்பு 2013, பக்கங்கள் 71 - 101). எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடுகளின் விளைவு, பொதுமக்களின் பாதுகாப்பை மட்டும் நிராரிக்கவில்லை ஆனால் அவர்களின் முன்னிலையில் பொதுமக்களை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட வைத்ததின் மூலம் அவர்களுக்குத் தீவிரமான தீங்கினை விளைவிக்கவும் வகை செய்தது. எனவே சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் தாக்குதலற்ற பாதுகாப்பு வலயம் அதற்குத் தேவையான தரங்களை கொண்டிருக்கவில்லை.

இலங்கையில் நடந்ததைப் போல, உள்ளக மோதல்களில் ஜனநாயக முறைப்படி தெரிவான அரசாங்கமும் மற்றும் அரசாங்கம் அல்லாத செயற்பாட்டாளர்களும் பங்குகொள்ளும் வேளைகளில் அவை ஆயுத மோதல்களாக வகைப்படுத்தப்படுவதில்லை. ஒரு மோதல் ஆயுத மோதலின் கீழ் வகைப்படுத்தப்படும்போது மட்டும்தான் மோதலில் ஈடுபட்டுள்ள கட்சிகளை சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியதற்கான பொறுப்புக்கூறலில் சமமாக நிறுத்த முடியும், ஏனெனில்

ஐ.சி.ஆர்.சி விதிகளின்படி: "சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், ஒரு சர்வதேச மோதல் ஆன ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்காளிகளையும் தான் கட்டுப்படுத்தும், அது அரசர்ங்கங்கள் சம்பந்தப் படும்போதுதான் அவதானிக்கப்படும், ஆனால் ஒரு உள்ளக மோதல் ஏற்படும்பொழுது அது அரசாங்கத்தையும் அதேபோல அதற்கு எதிராக போரிடும் குழுவையும் கட்டுப்படுத்தும்"...

இலங்கையில் நடைபெற்ற மோதல் ஒரு ஆயுத மோதல் என்பதை ஒப்புக்கொள்ள அரசாங்கம் தாமதிக்கும் காலம்வரை, எல்.ரீ.ரீ.ஈயின் செயற்பாடுகளினால் துரிதமாக்கப்பட்ட சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் மீறல்களை மேற்கொண்டதாக சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்காக இலங்கை தொடர்ந்தும் பொறுப்புக்கூறலை மேற்கொள்ளும்படியான வற்புறுத்தல்கள் தொடரவே செய்யும்.

மேலே விளக்கியுள்ளதின்படி, இறுதிக்கட்ட போரின்போது எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடுகள் காரணமாக சர்வதேச மனிதாபிமான சட்டங்களின்படியான எந்த வகையான மீறல் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அதற்கு பொறுப்பேற்க வேண்டியதும் மற்றும் கணக்கு கூறவேண்டியதும் எல்.ரீ.ரீ.ஈ யே.

மேலும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின்படி அங்கீகரிக்கப்பட்ட தாக்குதலற்ற பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லை, அதனால் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான உரிமைக்கு பொறுப்பானவர் என்னும் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டால் தூற்றுபவர்களின் ஏனைய கூற்றுக்களையும் அரசாங்கம் நிராகரிக்கலாம். அரசாங்கத்தின் செயற்பாடு காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் எனும் குற்றச்சாட்டையும் நிராகரிக்கலாம், ஏனெனில் பொதுமக்களையும் மற்றும் மோதலில் நேரடிப் பங்கேற்புச் செய்தவர்களையும் வேறுபடுத்திக் காட்டும் நிலையில் ஒருவரும் இல்லை. பொதுமக்களின் மரணங்களின் எண்ணிக்கையை நிறுவ மேற்கொண்டுள்ள முயற்சி பயனற்றதும் மற்றும் தெளிவற்றதுமான ஒரு நடவடிக்கை.

எனவே அரசாங்கம், வரப்போகும் ஜெனிவா கூட்ட அமர்வுகளில் இந்த மோதல் ஒரு ஆயுத மோதல் என்று காட்டவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. அத்துடன் ஐ.நா நிபுணர் குழுவும் இந்த மோதலை முன்னாள் யுகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின் அடிப்படையில் ஒரு ஆயுத மோதல் என்று வகைப்படுத்தியிருப்பதை தமது அறிவுக்கு ஆதாரமாகக் காட்டி தமது கூற்றை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், இலங்கை ஆயுத மோதலுக்கு ஒரு முடிவை கொண்டு வந்த மே 2009 முதல் இலங்கையை விடாப்பிடியாக துரத்திவரும் பொறுப்புக்கூறல் பிரச்சினையை நம்பத்தக்க வகையில் தீர்க்கக்கூடியதான வாழ்நாளில் ஒரு முறையே கிட்டக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு கை நழுவிப் போய்விடும்.

# ஐ.தே.க தவிசாளராக கபீர் ஹாசிம் நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தவிசாளராக நாடாளுமன்ற உறுபபினர் கபீர் ஹாசிம் நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் மத்திய செயற்குழு நேற்று முன்தினம் கூடிய போது, இந்த நியமனம் வழங்கப்பட்டதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருந்தோட்டத் துறை விவகாரங்களுக்கு பொறுப்பாக நாடாளுமன்ற உறுபபினர் ஹரேன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு மாகாண சபை உறுப்பினர்களையும் 12 பிரதேச சபை உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கும கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட தென் மாகாண சபை உறுப்பினர் கிஷாந்த புஸ்பகுமார மற்றும் ஜனநாயக கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்ட மேல்மாகாண சபை உறுப்பினர் நிமல் ஆர் பீரிஸ் ஆகியோரது கட்சி உறுப்புரிமைகள் நீக்கப்பட்டுள்ளன.

# பால்மாக்கள், எரிவாயு விலைகளை அரசாங்கம் அதிகரிக்க மாட்டாது

## கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

பால்மாக்கள் மற்றும் எரிவாயுக்களின் விலைகளை அதிகரிக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது. இவற்றின் விலைகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீண்டும் தெரிவித்துள்ளார்.

குருநாகல் ஏத்கல்ல என்ற இடத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாவனையாளர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கில் அரசு செயற்படாது. பொருட்களை பதுக்கிவைத்து இலாபம் ஈட்டுவோருக்கு எதிராக அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும். விலையை அதிகரிக்கும் நோக்கில் பொருட்கள் பதுக்கி வைக்கப்படுவதால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பால்மாக்களின் அல்லது எரிவாயுக்களின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அனைத்து தரப்பினருக்கும் நன்மை தரக்கூடிய செயற்பாடுகளை அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும்.

தற்சமயம் நுகர்வோர் பாதுகாப்புச் சபையின் மூலம் மக்களுக்கு உரிய நியாயங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் பொருட்களின் விலைகளை அதிகரிக்க அரசு முயற்சிப்பதாக சிலர் குறை கூறி வருகின்றனர். இக்கூற்றில் எவ்வித உண்மையும் இல்லை. பதுக்கி வைத்து இலாபம் ஈட்ட முயற்சிக்கும் பொருட்கள் பற்றி பொதுமக்கள் தகவல் கொடுத்து வருகின்றனர். பொருட்களை பதுக்கி வைப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

# முஸ்லிம் மக்களின் நட்சத்திரமாக ஜனாதிபதி மாற முடியுமா?

## ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

(கொழும்பு)

பாலஸ்தீனத்தின் நட்சத்திரமாக மாறுவதை விட இலங்கை முஸ்லிம் மக்களின் நட்சத்திரமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக் அவர் வெளியிட்டுள்ள அறிகையில்,

பாலஸ்தீனத்தின் நட்சத்திரமாக மாறும் முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை முஸ்லிம்களின் நட்சத்திரமாக மாறிக்காட்ட வேண்டும்.

எனினும் இலங்கை முஸ்லிம் மக்களுக்கு அது நிறைவேறாத பகல் கனவு. ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் இலங்கை முஸ்லிம்கள் பகலில் நட்சத்திரத்தை காண்கின்றனர். அப்படியான வேலைகளை ராஜபக்ஷ அரசாங்கம் செய்துள்ளது.

பாலஸ்தீனத்தின் நட்சத்திரம் என்ற விருது வழங்கப்பட்டமை தொடர்பில் இலங்கை முஸ்லிம் மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் உலக முஸ்லிம் மக்களிடம் கிடைத்த கௌரவமாக இந்த விருதை காண்பிக்க முயற்சித்து வருகிறது.

அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் அடிப்படைவாத மத செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் முஸ்லிம் மக்கள் பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் வணக்கஸ் தலங்கள், வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதோடு மத உரிமை, வர்த்தகம் செய்யும் உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது இருந்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னிப்புக் கோரினார் பிரதமர் ஜயரட்ன

"காவியுடையணிந்தவர்கள்" என்று அடையாளப்படுத்தியதன் காரணமாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன, சகல பிக்குகளிடமும் மன்னிப்புக் கோருவதாக பிரதமரின் இணைப்புச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், பிரதமரின இணைபபுச் செயலாளரான அமில சுதேஹ பியசிங்கவின் கையொபபத்துடனான, மன்னிப்புக் கோரும் ஆவணம் சிஹல ராவய இயக்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# ஒற்றுமையை கட்டியெழுப்புவோம் உலகை வென்ற நாட்டில் 66 ஆவது சுதந்திரதினம் கேகாலையில்



இலங்கையின் 66ஆவது சுதந்திரதின விழா இம்முறை கேகாலை நகரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திரதினத்தின் தொனிப்பொருள் "ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம் உலகை வென்ற நாட்டில்" என்பதாகும். சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி கொழும்பு 7 இல் அமைந்துள்ள சுதந்திர சதுக்கத்தில் சமய அனுஷ்டானங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தைப் பாடுவதற்காக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவ மாணவிகள் 110 பேர் கலந்துகொள்ளவுள்ளனர். கலாசார ஊர்வலமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை முப்படையினர்- பொலிஸார்- சிவில் பாதுகாப்பு படை- தேசிய மாணவர் படை மற்றும் இளைஞர் படையணியை பிரதிநிதித்துவப்படுத்தும 3500 பேர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# காட்சிப்படுத்தப்பட்டுள்ளது வாக்காளர் பெயர்ப்பட்டியல்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும், பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் இந்தப் பெயர்ப்பட்டியல் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக மேலதிக் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.




இதனைத்தவிர, கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் 2013 ஆம் ஆண்டுக்கான பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான பெயர்ப்பட்டியல் கடந்த 31 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பலவந்தமாக பணம் வசூலிப்பு விசாரணைகள் ஆரம்பம்

(ஜோர்தான்)

ஜோர்தான் பல்கலைக்கழகத்தில் இருந்து புலமை பரிசில் பெற்றுக்கொள்ளும் மாணவர்களிடம் பலவந்தமாக பணம் வசூலித்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் புலமை பரிசில் பெற்றுக் கொள்ளும் மாணவர்களிடம், வேறு சில மாணவர்கள் பலவந்தமாக பணம் வசூலிப்பதாக நேற்று முன்தினம் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.


இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரின் உதவிடன் விசாரணைகள் மேற்கொளளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# துண்டு துண்டாக வெட்டப்பட்டு ஜப்பான் வாகனங்கள் இறக்குமதி

## சிக்கியது சுங்கத் திணைக்கள உளவுப்பிரிவில்

(கொழும்பு)

ஜப்பானிலிருந்து சட்டவிரோதமாக துண்டு துண்டாக வெட்டப்பட்ட ஒன்பது வாகனங்களை சுங்கத் திணைக்களத்தின் மத்திய உளவுப் பிரிவு கைப்பற்றியுள்ளது.



சுங்கத் திணைக்களத்தின் கொழும்பு பாலத்துறை யிலமைநதுள்ள கொள்கலன் இறங்கு துறையில் 40 அடி நீளமான கொள்கலன் சந்தேக நபர் முன்னிலையில் திறக்கப்பட்ட போது துண்டு துண்டாக வெட்டப்பட்ட வாகனங்கள் கண்டுபிடிகபட்டன.

இவற்றின் பெறுமதி சுமார் 15 மில்லியன் ரூபா என மதிப்பிடப்படுவதாக சுங்கத் திணைக்களத்தின் பிரதி அத்தியட்சகர் திலக் பெரேரா தெரிவித்தார்.

மிட்சுபிசி, டொயாட்டா, ஹொண்டா, மற்றும் மினி கூப்பர் ரக ஒன்பது வாகனங்கள் ஒவ்வொன்றும் மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டு மிக நேர்த்தியாக கொள்கலனுக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கொள்கலனை ஸ்கான் செய்தாலும் இவை கண்டு பிடிக்க முடியாதவாறு பழைய பாவிக்கக்கூடிய டயர்களால் மூடப்பட்ட நிலையிலேயே கொள்கலன் திறக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட்ட கொள்கலனை விடுவிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து சுங்கத் திணைக்களத்தின் (சீ.ஐ.டி.) மத்திய உளவுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது. மத்திய உளவுப்பிரிவின் விசாரணைகளின போது கொள்கலனுள் ஜப்பானிலிருந்து தையல் இயந்திரங்கள் இறக்குமதி செய்வதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட போதும் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபர் கைதாகியுள்ளார். நேற்று முன்தினம் சந்தேக நபர் முன்னிலையில் கொள்கலன் திறக்கப்பட்ட போது மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தையல் இயந்திரம் இறக்குமதி என ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய 40 அடி கொள்கலனினுள ஒரே ஒரு தையல் மெஷின்மட்டுமே இருந்தது. சுங்கத்திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது.

2 வருடத்துக்கு மேற் பட்ட வாகனங்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சுமார் 10 வருடத்துக்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்த வாகனங்களே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# பனைசார் அபிவிருத்தி மேம்பாடு துறைசார்ந்தோருடன் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)



யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழிகாட்டலின் கீழ் பனைசார்ந்த தொழிற்துறை பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது என யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ்.கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் நடப்பாண்டுக்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடலின் போதே இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதன்போது பனைசார்ந்த தொழிற்றுறையை மென்மேலும் மேம்படுத்தும் பொருட்டு அரசிடமிருந்து 300 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அதற்கேற்ப வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே 2014ஆம் ஆண்டு குறித்த தொழிற்றுறை மேம்பாட்டுக்கென முதற்கட்டமாக 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டம் கட்டமாக திட்டங்கள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் மேலதிக நிதியினை பெற்றுக் கொள்ள முடியுமென்றும் தெரிவித்த அமைச்சர் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினது நடப்பாண்டுக்கான செயற்றிட்டங்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், துறைசார்ந்தவர்கள் தமக்கான தொழிலாகவும், வருவாயைப் பெற்றுக் கொள்ளும் முகமாகவும் செயற்படாமல் சமூக அக்கறையுடன் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக கொடிகாமம், வடமராட்சி மற்றும் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களுக்கு கீழான கிளைகளில் பனம் கள்ளிலிருந்து வெல்ல உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அதற்கான திட்ட அறிக்கையினை இரண்டு வாரத்திற்குள் தம்மிடம் சமர்ப்பிக்கு மாறும் துறைசார்ந்தோரிடம் பணிப்புரை விடுத்தார்.

இதில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பனை அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் லோகநாதன், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின். சமாசத் தலைவர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இளைஞர்கழக சம்மேளனத்தின் நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் இம்மாதத்திற்கான நிர்வாக சபைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.லக்ஷன் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் உட்பட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இது சம்பந்தமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் நிர்வாகிகள் அனைவருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும், அனைவரையும் தவறாது சமூகம் தருமாறும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியும், மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலாளருமான வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (48)

# சிங்கள வகுப்புக்கள்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களால் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள் பளை பிரதேச செயலர் பிரிவில் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் மாவட்ட உத்தியோகத்தர் நடராசா உமாநாத் பளை பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணியின் ஒத்துழைப்பைப் பெற்று பளை நகர கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரனின் வழிகாட்டலில் ஜெயந்திநகர், செல்வாநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் சிங்கள மொழிப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளது. (90)




# இடபம்

(கார்த்திகை 2,3,4ஆம் கால், ரோகினி,மிருகசீரிடம் 1/2)

வியாழன் 13.06.2014 வரை கோசர ரீதியில் 2இல் நின்று நன்மையான பலாபலன்களையே தந்து கொண்டிருப்பார். விவாக முயற்சிகள் தடையின்றி நிறைவேறும். குழந்தைப் பாக்கியம் கிட்டும் புதிய மனை, வாகன யோகம் ஏற்படும். கைவிட்டிருந்த வெளியூர் பயண முயற்சிகள் கைகூடும். காதல் மலர்ந்து திருமணத்தில் முடிவடையலாம். வங்கித் தொடர்பினால் கடன் பெற்று பொருளாதார சுபீட்சம் ஏற்படும். நோய்கள் குணமடைந்து தேகம் பொலிவடையும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் பணத்தை அள்ளித்தரலாம். 13.06.2014 தொடக்கம் வியாழன் வருடமொன்றுக்கு 3இல் நிற்பதினால் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் முயற்சிகளில் பின்னடைவுகள், தடை தாமதங்கள் ஏற்படலாம். புதியன கொள்வனவு செய்யும் போது காலாவதித்திகதி மற்றும் நம்பகத்தன்மையைப்பாருங்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை சகோதரர் மத்தியில் தலைதூக்கும். பயண முயற்சி இடை நடுவில் தடைப்பட்டும் விடலாம். மேலாதிகாரிகளுடன் முரண்பட்டு கசப்பான நிலை தக்க வைக்கப்படலாம். போலி நகைகள், கள்ள நாணயங்கள் அகப்பட்டு கவலை ஏற்படும்.

இடபராசிக்கு சத்துரு சங்கார சனீஸ்வரனாக சனி 6இல் நின்று இதுவரை காலம் பட்ட துன்பங்களை இன்பநிலைக்கு 16.12.2014வரை கொண்டு வருவார். மாமன்மாரின் உதவியால் வசந்த காலம் பிறக்கும். நோய் குணமடைந்து ஜீவசக்தி ஏற்படும். வழக்குகளின் முடிவுகள் சாதகமாக வரும். கல்விப் பெறுபேறுகளினால் அரசுத்தொழிலுக்கு சந்தர்ப்பமுண்டாகும். புத்திரபாக்கியம் கிட்டும். திருமணத்தில் நிலவிய தடையும் தாமதமும் அற்றுப்போகும். சுவீப் அதிர்ஷ்டமுண்டு. இராகுகேது கிரகங்கள் 21.06.2014 வரை 6ஆம் நிலையில் இடம்பெற்று ஈடுபடும் முயற்சிகளில் முன்னேற்றம் பிறக்கும். தொடுத்த வழக்கின் முடிவுகள் சாதகமான முடிவினைத்தரும். சிலருக்கு நோய் காரணமாக மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். 21.06.2014 தொடக்கம் 1 1/2 ஆண்டுகளுக்கு இராகுகேது என்பன 5ஆம், 11ஆம் ஸ்தானத்தில் நின்று குழந்தைப்பாக்கியம் மற்றும் ஈடுபடும் தொழில்களில் இலாபத்தை ஈட்டித்தரும். புதிய மனை, வாகனயோகம் அயல் நாட்டுப் பிரயாணம் அமையும். பரீட்சை முடிவுகள் எதிர்கால சுபீட்சத்திற்கு வழியேற்படுத்தும். (தொடரும்)

# உங்களின் தொழில் தெரிவுக்கு வழிகாட்டும் ஜோதிடம்

ஜோதிடர் வித்யாரத்னா வி.ஏ.சிவராசா

## பிறந்த திகதிகள் 07,16,25

மதத்தின் பெயராலும், தத்துவங்களைப் பரப்புவதாலும், ஆராய்ச்சிகள், எழுத்து மூலமும் செல்வம் குவியும். 7ஆம் திகதி நடுவயதிலும், 16 எனின் பால்யத்திலும் 25 ஆனால் 40 வயதுக்கு மேற்பட்டும் அதிர்ஷ்டமுண்டாகும். கடல்மூலம் நடாத்தும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், எலக்ரோனிக், மின்சாரப்பொருட்கள், சினிமா, படம்பிடித்தல், மணிக்கூடு சித்திரம், சிற்பம் சங்கீதம், நடனம் இவைகளில் இளமையில் எதில் நாட்டமிருக்கின்றதோ அத்தொழில் மூலம் பிரபலமும், செல்வமும் கிடைக்கும். அரசியலில் பிரமுகராவர். அரசாங்க உத்தியோகத்தால் பல பேருக்கு தலைமை வகிக்கும் நிர்வாகியாவார். மருந்துப் பொருட்கள் விற்பனையும் ஏற்ற தொழிலாகும். (தொடரும்)

# முரசின் இன்றைய பலன்



(10.01.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 26 ஆம் திகதி.
பரணி நட்சத்திரம் பி.இ. 03.36 வரை.
தசமி/சித்தம்.
இராகுகாலம் 11.03 - 12.33 வரை. சுபநேரம் 06.33 - 08.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பரீட்சைப்பெறுபேறு பாதிக்கப்பட்டதால் தொழிற் கல்வியில் ஈடுபட விண்ணப்பம் செய்ய முஸ்தீபு, விளையாட்டுத்துறையில் திறமை காட்டியபடியினால் பரிசில்களும் பாராட்டும் கிடைத்தல். |
| ரிஷபம் | உடல் குண்டாகி பருமனால் அவதிப்படும் நிலையைப் போக்க 'ஜிம்' நிலையத்தை நாடும் நோக்கமேற்படல், வாதம்,விதண்டாவாதம் செய்ததால் நண்பரின் உறவு சீர்கேடடைதல். |
| மிதுனம் | பொருட்களைப்பதுக்கி வைத்ததினால் தண்டனை பெறும் நிலைக்காளாகுதல், விவாக முற்சிக்கு விளம்பரம் செய்யப்பட்டவேளை உரியவரன் கிடைத்ததால் கவலை அற்றுப்போதல். |
| கடகம் | மனைதேடி விற்பனை செய்ய வந்தவரின் பொருளை அதிகவிலை கொடுத்ததால் கவலைப்படல், நடமாடும் சேவையினால் இழந்த ஆவணங்களைப் பெற்றக் கொண்டதால் மகழ்வடைதல். |
| சிம்மம் | கடன் தொல்லையால் தலைமறைவாகும் நிலையில் இடம்மாறிச் சென்று விடத்தீர்மானம், பொறுப்புக்களை ஏற்றுச் செயலாற்றும்படி வந்த கடிதம் கண்டு மகழ்வடைதல். |
| கன்னி | கால் நடைகள், செல்லப்பிராணிகள் மூலம் தொற்றும் 'உண்ணிக்காய்ச்சல' பற்றி விழிப்பாக இருத்தல், நன்றிக்கடன் பாராட்ட வீடுதேடிவந்த நண்பனின் செயற்பாட்டால் புளகாங்கிதமடைதல். |
| துலாம் | திட்டமிட்ட பணிகள் விரைந்து செயற்பட்டதால் உரிய காலப்பொழுதில் முடிவடைதல், மனையாளின் புத்தி மதிக்கு செவிசாய்த்த படியினால் துயர்விலகிப் போதல். |
| விருச்சிகம் | கல்விப்புலத்தில் ஈட்டிய சாதனைக்காக பாராட்டும் பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்படல், சுயகௌரவம் பாதிக்கப்படாமல் நடந்து கொள்ள முயற்சி எடுக்க பின் நிற்காதீர்கள். |
| தனுசு | திருமண நிகழ்விற்காக குடும்பசகிதம் வெளியூர் செல்லும் முயற்சியில் ஈடுபடல், உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்பவர் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். |
| மகரம் | பண்பு கெட்ட ஒருவருக்கு செய்த உதவியினால் ஏற்பட்ட கேடுபற்றி அறிந்து விசனப்படல், நிலுவைகள் உரிய நேரத்தில் வந்தடைந்தமையால் கடன் தொல்லை அகன்று விடல். |
| கும்பம் | அயலவர்களின் ஒத்துழைப்பினால் சுப மங்கள நிகழ்வு சிறப்பாக நிறைவேறல், திட்டமிட்ட செயல்கள் ஊழியர்களின் ஒத்துழைப்பினால் நிலுவையின்றி முடிவடைதல். |
| மீனம் | பெற்றோரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு பயணத்தை ஒத்திவைத்தல், நுனிநாக்கில் அமுதமும் அடிநாக்கில் விஷமும் கொண்ட நண்பரின் உறவில் அவதானம் நன்று. |



நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மற்றும் அவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் நேற்றைய தினம் மெல்பேர்னில் கிரிக்கெட் ஆடினர். இதில் இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் முத்தையா முரளிதரன் மற்றும் அவுஸ்ரேலிய அணியின் அதிரடி வீரர் ஆரோச் பின் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம்.

# காயமின்றி இருந்தால் சாதிப்பார் செரீனா

செரீனா காயமின்றி தொடர்ந்து உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால் அவரால் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்கு மேல் வெல்ல முடியும் என்பதில் சந்தேகமில்லை. அவரை கட்டுப்படுத்துவது கடினம். அவருக்கு வானம் தான் எல்லை என ரென்னிஸ் ஜாம்பவான் செக்கோஸ்லோவாக்கியாவின் மார்ட்டினா நவரத்திலோவோ தெரிவித்துள்ளார். பொதுவாக 30 வயதை கடந்து விட்டாலே அதன் பின்னர் சாதிப்பது எவ்வளவு கடினம் என்பதை நான்அறிவேன். ஏனெனில் சிறு சிறு காயங்கள் கூட அப்போது மோசமாகி விடும். மோசமான தோல்விகளையும் சந்திக்க வேண்டி வரும். ஆனால் செரீனா விளையாடுவதைப் பார்க்கும் போது அவர் இப்போது மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது தெரிகிறது. 30 வயதை தாண்டினாலும் கூட தொடர்ந்து ஜெயித்துக் கொண்டே இருக்க வேண்டும். சாதனைப் பயணத்தைத் தொடர வேண்டும் என்ற அதீத ஆர்வம் அவரிடம் இருக்கிறது. பகிரங்க ரென்னிஸ் வரலாற்றில் பெண்களில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் ஜேர்மனியின் ஸ்டெபி கிராப் அவர் 22 கிராட்ண்ஸ்லாம் பட்டத்தை ருசித்துள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் நவரத்திலோவாவும், கிறிஸ் எவர்ட்டும் தலா 18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் உள்ளனர். அச்சாதனையை அவுஸ்ரேலிய பகிரங்க மூலம் செரீனா சமன் செய்ய வாய்ப்புள்ளது.

## வருடாந்த விளையாட்டு விழா நெடுந்தீவில் இன்று சந்திப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச வருடாந்த விளையாட்டு விழா சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகத் தலைவர், செயலாளர்களைத் தறவாறுகலந்து கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் மயூரன் கேட்டுள்ளார். (93)

## ஐந்து வீரர்களையும் தக்கவைக்கும் மும்பை

ஏழாவது ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 வீரர்களையும் தக்க வைக்க முடிவு செய்துள்ளது.

கப்டன் ரோகித் சர்மா மற்றும் மேற்கிந்தியத்தீவைச் சேர்ந்த கிரன் போலார்ட் ஆகியோர் உறுதியாக தக்க வைக்கப்படலாம். 2ஆவது வெளிநாட்டு வீரராக ஆஷஸ் தொடரில் கலக்கிய ஜோன்சன் அல்லது இலங்கையின் மலிங்க ஆகிய இருவரில் ஒருவர்தேர்வு செய்யப்படலாம். இதில், யாரைத்தேர்வு செய்வது என்பதில் குழப்பம் நீடிக்கிறது. இருவரில் ஒருவரைத் தக்கவைத்து மற்றொரு வீரரை ஜோக்கர் கார்ட் முறையில் தேர்வு செய்யவும் திட்டம் உள்ளது.

அதேபோல தினேஷ் கார்த்திக் மற்றும் ராயுடு ஆகிய இருவரில் ஒருவரை தக்க வைப்பதில் அணி நிர்வாகம் குழம்புகிறது. 5ஆவது வீரராக ஹர்பஜன் தேர்வு செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

## உயிரைக் காத்த உத்தமர்கள்

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வீரர்களான மட் பிரியரும், ஸ்ரூவெர்ட் புரொட்டும் சிட்னியில் உள்ள அறக் கட்டளையொன்றுக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தாங்கள் தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்குள்ள டார்லிங் ஹார்பர் பகுதியின் மேம்பாலத்தில் நின்ற அடையாளம் தெரியாத நபர், தனது செல்போன், பேர்ஸ் மற்றும் பாஸ்போர்ட்டை ஆற்றில் வீசினார். பின்னர் தானும் பாலத்தின் முனையில் நின்று ஆற்றில் குதிக்கத் தயாரானார். அப்போது அங்கு வந்த வீரர்கள் இருவரும், லாவகமாக பேசி அவரை பாலத்திற்கு மேலே அழைத்து வந்தனர்.

அதே சமயத்தில் நியூ சவுத் வேல்ஸ் காவல்துறையினருக்கும் இது குறித்து தகவல் தெரிவித்தனர். அவர்கள் வருவதற்கு ஒரு மணி நேரம் ஆன போதும் கூட பொறுமையாக அந்த நபரிடம் பேச்சுக் கொடுத்து காலம் கடத்தி வந்துள்ளனர். காவல்துறையினர் வந்தவுடன் அவரை அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இங்கிலாந்து வீரர்களின் இந்த உயிர் காக்கும் முயற்சிக்கு பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். ஆனால் பிரியர் இது குறித்து கூறும்போது எங்கள் நிலையில் யாராக இருந்தாலும் அவர்களும் இதுபோன்றே செயற்பட்டிருப்பார்கள் என தன்னடக்கமாக கருத்துக் கூறியுள்ளார்.

## அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் வெளியானது தரநிலை விபரம்

ஆண்டுதோறும் அவுஸ்ரேலிய ஓப்பன், பிரெஞ் ஓப்பன், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் ஆகிய 4 கிராண்ட்சிலாம் ரென்னிஸ் போட்டி நடைபெறும்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்சிலாமான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி மெல்பேர்னில் ஆரம்பமாகின்றது. 26ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்கள் பிரிவில் ஸ்பெயினைச் சேர்ந்த ரபெல் நடால் முதல் இடத்தில் உள்ளார். ஜோசோவிச் (சேர்பியா) 2ஆவது இடத்திலும், டேவிட் பெரர் (ஸ்பெயின்) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) டெல் போட்ரோ (ஆர்ஜென்ரீனா),ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), தோமஸ் பெர்டிச் (செக் குடியரசு), வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), ரிச்சர்ட் (பிரான்ஸ்) சோங்கோ (பிரான்ஸ்) ஆகியோர் முறையே 4 முதல் 10ஆவது இடத்தில் உள்ளனர்.

பெண்கள் தரவரிசையில் அமெரிக்காவைச் சேர்ந்த செரீனா வில்லியம்ஸ் முதல் இடத்தில் உள்ளார். அசரென்கா (பெலாரஸ்) 2ஆவது இடத்திலும், ஷரபோவா (ரஷ்யா) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

லீநா (சீனா),ரட்வன்ஸ்கா (போலந்து), குவிட்டோவா (செக்குடியரசு), சாரா இரானி (இத்தாலி), ஜெலீனா ஜோன் கோவிக் (சேர்பியா), கெர்பர் (ஜேர்மனி), வோஸ்னியாக்சி (டென்மார்க்) ஆகியோர் முறையே 4 முதல் 10ஆவது இடத்தில் உள்ளனர்.

## ஒரு நாள் தொடர் சமநிலை

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 203 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்தது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. முதல் 4 போட்டியில் நியூசிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. 2ஆவது போட்டி மழையால் இரத்துச் செய்யப்பட்டது. 5ஆவது மற்றும் கடைசிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை ஹமில்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 363 ஓட்டங்களைக் குவித்தது. இதில் டுவைன் பிராவோ 81 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்லாக 106, எட்வேர்ட்ஸ் 108 பந்துகளில் நான்கு சிக்ஸர்கள்,



12 பவுண்டரிகள் அடங்கலாக 123 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 364 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 29.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும்இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் அண்டர்சன் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மில்லர் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது.

## பிடித்ததால் பரிசு



நியூசிலாந்தில் நடக்கும் போட்டிகளில் இரசிகர்களுக்கும் பரிசு வழங்கப்படுவது வழக்கம். வீரர்கள் சிக்சர் அடிக்கும் பந்தை அரங்கில் போட்டியை இரசிக்கும் இரசிகர்கள் பிடித்தால் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் பவல் அடித்த பந்தை அரங்கில் இருந்த மைக்கல் மோர்டன் என்ற இரசிகர் ஒரே கையால் பிடித்தார். இதற்காக அவருக்கு 50 இலட்சம்பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

## ஒத்திவைப்பு

(சிட்னி)

ஆஷஸ் ஹீரோக்களில் ஒருவரான அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹரிசுக்கு வலது கால் முட்டியில் பிரச்சினை இருந்து வருகிறது. ஆனால் அடுத்த மாதம் உலகின் முதல்நிலை அணியான தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் (3 போட்டி) வருவதால் கால்முட்டி காயத்துக்கு மேற்கொள்ள இருந்த சத்திரசிகிச்சையைத் தள்ளிப் போட்டுள்ளார். தென்னாபிபிரிக்கதொடர் முடிந்ததும் சத்திர சிகிச்சை செய்ய முடிவு செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

## கௌசல் சில்வா, மஹேல பொறுப்பான ஆட்டம் இலங்கை முன்னிலை



கௌசல் சில்வா, மஹேல ஜெயவர்த்தன ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி நேற்றுத் தொடர்ந்தது. கௌசல் சில்வா ஒரு முனையில் பொறுமையாக ஆடியபோதும், மறுமுனையில் சங்கக்கார, சண்டிமால் ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மஹேல ஜெயர்த்தன, கௌசல் சில்வாவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். இந்த ஜோடி பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களைப் பெரும் சோதனையைக்கொடுத்து ஓட்டங்களை மெல்ல மெல்ல சேகரித்தது. இந்நிலையில் இந்த ஜோடி 139 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்றைய இரண்டாம் ,நாள் ஆட்டம் நிறுத்தப்பட 20 ஓவர்கள் இருக்கையில், இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கௌசல் சில்வா 221 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்று கன்னிச் சதடிமக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். சங்கக்கார 26, கருணாரட்ன 32 ஓட்டங்களைப் பெற்றனர். மஹேல ஜெயவர்த்தன 157 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்து வீச்சில் யுனைட்கான் இரு விக்கெட்டை வீழ்த்தினார். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 77 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 166.

# இளைஞர் கழக மென்பந்து மானிப்பாயில் நாளை ஆரம்பம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப்பொங்கலை முன்னிட்டு வருடா வருடம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடர் நாளைய தினம் நடைபெறவுள்ளது.

வடமாகாண ரீதியில் நடைபெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் 50 அணிகள் பங்கு கொள்கின்றன.

இப்போட்டிகள் அணிக்கு 6 பேர் 5 ஓவர்களைக் கொண்டதாக அமைய வுள்ளன.

ஏ குழுவினருக்கான போட்டிகள் நாளைய தினம் காலை 7.30 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் நாளைய தினம் மோதவுள்ள அணிகள் விபரம் வருமாறு:

சுன்னாகம் யுனிவேர்சல் எதிர் பொற் பதி. இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கொக்குவில் காமாட்சி ஏ மோதவுள்ளது.

சுன்னாகம் றொக்கட் எதிர் கொக்கு வில் ஆர்.பீ. இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் வட்டுக்கோட்டை அணி மோதவுள்ளது.

நெல்லை பிளாசா எதிர் வல்வை. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி யுடன் திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய ஏ அணி மோதவுள்ளது.

இளவாலை ஹென்றீஸ் எதிர் கைதடி குமரன். இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கொட்டடி இளங் கதிர் அணி மோதவுள்ளது.

உடுவில் கிங்ஸ்ரார் எதிர் யாழ். கிங்ஸ்ரார். இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் உடுவில் சிந்து வி.க அணி மோதவுள்ளது.

கொம்மாந்தறை எதிர் கொக்குவில் ஏ.பி. இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கோப்பாய் சென் மேரிஸ் அணி மோதவுள்ளது.

நந்தாவில் எதிர் அரியாலை சரஸ் வதி. இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி மோதவுள்ளது.

சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் எதிர் லெவின் ஸ்ரார் ஏ. இப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதவுள்ளது. (48)

# யாழ். மாவட்டம் 3ஆம் இடம்



இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேள னம் கொழும்பு டொரிங்டன் மைதானத் தில் வார இறுதியில் நடாத்திய 2013இற் கான வலைப்பந்தாட்ட அபிவிருத்திஅணி களுக்கு இடையிலான வலைபந்தாட்டப் போட்டிகளில் யாழ். மாவட்ட அபிவிருத்தி குழாம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

எட்டு வலைப்பந்தாட்ட அபிவிருத்தி குழாம்கள் இப்போட்டிகளில் பங்கு பற்றின. யாழ். மாவட்ட அபிவிருத்தி குழாமில் தெல்லிப்பளை யூனியன் கல் லூரி அணி வீராங்கனைகள் பங்குபற் றினர்.

லீக் அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டிகளில் ப்ளேகிறவுண்ட்ஸ்அபி விருத்தி குழாம், களுத்துறை மாவட்ட அபிவிருத்தி குழாம் ஆகிய பலம்வாய்ந்த அணிகளுக்கு சவால் விடுத்த யாழ். மாவட்ட அபிவிருத்தி அணி குறைந்த கோல்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. எனினும் மற்றைய ஐந்து போட்டிகளில் பதுளை,காலி, கேகாலை, குருநாகல், கொழும்பு ஆகிய மாவட் டங்களில் பலம்வாய்ந்த அபிவிருத்திக் குழாம் அணிகளை யாழ். மாவட்ட அபி விருத்தி (யூனியன் கல்லூரி) அணி வெற்றிகொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (93)

விளையாட்டு செய்திகள்

# வென்றது மகாஜன

(தெல்லிப்பளை)

கொக்குவில் ஏ.பி. அணிக்கெதிரான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக் கும் கொக்குவில் ஏ.பி அணிக்குமிடை யிலான நட்புறவு ரீதியான கிரிக்கெட் போட்டியொன்று அண்மையில் தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கொக்குவில் ஏ.பி 27.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராகுலன் 82, உத்த மன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலோஷன் மூன்று, ரமேஷ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற் றினர். பதிலுக்கு 154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய மகாஜனக் கல்லூரி அணி 18.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக் கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டிலோஷன் 55, சாரங்கள் 36, ஜனந்தன் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிலோஜன் இரண்டு, ராகுலன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (48)

# செலான் வெற்றிக் கிண்ண கால்பந்து நாளை காலிறுதி ஆட்டங்கள்

(நெல்லியடி)

செலான் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் காலிறுதி ஆட்டங்கள் நாளைய தினம் நடைபெறவுள்ளது.

நெல்லியடி செலான் வங்கி அனுசரணையுடன் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் செலான் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் கடந்த 4ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் வதிரி டையமன்ஸ் மற்றும் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானங்களில் நடைபெற்று வருகின்றது.

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் டையமன்ஸ் அணியை எதிர்த்து சென். சேவி யர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறவுள்ள மற்றொரு காலிறுதிப் போட்டியில் வல்லை அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் யங்கமன்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணியும், தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது காலிறுதிப்போட்டியில் கலைமதி அணியை எதிர்த்து கொலின்ஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)



பருத்தித்துறை மாதனை விளையாட்டுக் கழகம் வருட இறுதியை முன்னிட்டும் புத்தாண்டை வரவேற்பை முன்னிட்டும் நடாத்திய மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் இரவு மின்னொளியில் நடைபெற்றது. இதில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து கோண்டாவில் துர்க்கா அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கோண்டாவில் துர்க்கா கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் பங்குபற்றி சிறப்பித்திருந்ததுடன் வெற்றிக்கிண்ணத்தையும் வழங்கி வைத்தார். (48)

# தேசத்தின் மகுடம் கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டி வடமாகாண ரீதியாக இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத் தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை எதிர்வரும்13ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட கரப்பந் தாட்ட சங்கத்தின் கூடாக தமது பதிவு-களை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (93)

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங் கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடை பெற்று வருகின்றது. இந்நிலையில் இன்றைய தினம் சென். ஜோண்ஸ் கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மோதவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.,93)

# ஒத்திவைப்பு

(வேலணை)

வேலணைப் பிரதேச வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படவிருந்த பெருவிளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித் துள்ளனர்.

சீரற்ற கால நிலை மற்றும் மழை காரணமாக மைதானம் ஈரலிப்பு மற்றும் வெள்ளம் நிறைந்தும் காணப்படுவ தால் நாளை மறுதினம் நடைபெறவிருந்த எல்லே மற்றும் 12ஆம் திகதி நடை பெறவிருந்த கரப்பந்து, வலைப்பந்து போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின் னர் அறிவிக்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்(93)

# பங்காளிக் கட்சிகள் கூறமுனையும் செய்தி என்ன?

பட்ஜெட் தோல்விகளை சந்திக்கும் தமது பிரதேச சபை தலைவர்களை பாது காக்கும் நோக்கில் உள்ளூட் சிக்கான சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவர ஆளும் தரப்பு தீவிர ஆலோ சனைகளை மேற்கொண்டி ருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இவ்வாறான ஒரு நெருக் கடி நிலை பிரதேச சபைக- ளில் ஆளும்தரப்புக்கு மட்டுமானதாக அன்றி தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் ஒரு சோதனையாக இப்போது மாறிவிட்டிருக்கிறது.

தோற்கடிக்கப்படும் இந்த சபைத்தலைவர்களின் பதவி யை நீடிக்கவென சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் முயற்சி நடைமுறைக்கு வருமாயின் உள்ளூட்சி சபைகளின் வரலாற்றில் இதுவரை இடம்பெறாத பல குழறுபடிகளையும் நாம் இனி வருங்காலத்தில் எதிர்பார்க்கலாம்.

இந்த நிலைமையை சிறுபான்மை கட்சிகள் மட்டு மன்றி தேசியக் கட்சிகளும் எதிர்கொண்டிருப்பதால் இந்தக் கூட்டுக்குள் உண்மை யாக என்ன நடைபெறுகிறது என்பது இப்போது அனைத்து தரப்பினதும் கவனத்துக்குரிய தாக மாறியிருக்கிறது.

ஒரே சின்னத்துக்குள் ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொள்ளும் இந்த நடைமுறை வெளியே தேர்தலில் இனம் சார்ந்து ஒரு ஒற்றுமையான நிலைப்பாட்டை தாம் மேற்கொண்டிருப்பதான ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்த முனைகின்றது.

தனித்து நிற்க முடியாத நிலையில் மேற்கொள்ளப்படும் ஒற்றுமைக்கான இந்த தோற்றப் பாட்டின் போலித்தனம் தேர்தலில் விருப்பு வாக்குகளுக்காக சக வேட்பாளர்களுடன் முட்டி மோதிக்கொள்வதில் வெளிப்பட்டுவிடுகிறது.

வென்று அதிகாரத்துக்கு வரும் வேட்பாளர்களும் சரி, தோற்றுப்போய்விட்டவர்களும் சரி, கூட்டுக்கட்சிக்காக மட்டுமன்றி தான் சார்ந்த கட்சியின் நலன்களையும் கவனத்தில் கொண்டு செயற்பட முடியாத நிலைமையும் இதற்கு ஒரு காரணம்.

இந்த செயன்முறையில் கட்சி சார்ந்து சபை நடவடிக் கைகளை கவனத்தில் கொள்வதென்பது இந்த சபை உறுப்பினர்களுக்கு சிக்கலான தாக மாறிவிட்டிருப்பதும் இருப்பதும் இவ்விடத்தில் கவனத்துக்குரியது.



இதில் கூடுதல் வாக்கை பெற்று தவிசாளர் பதவிக்கு வரும் வேட்பாளர் எந்த ஒரு அரசியல் கட்சியினதும் பாரம்பரியத்துக்குள் புதிய ஒரு நபராகவும் கூட சில சமயங்களில் இருக்கலாம்.

இவருக்கு இந்தக் கட்சிகளின் நலன் சார்ந்தெல்லாம் செயற்பட வேண்டுமென்ற தேவை, நிர்ப்பந்தம் இருக்க அவசியமில்லை. அல்லது இந்த கூட்டுக்குள் இணைந்து போட்டியிட்டதில் சக உறுப்பினர் களுடன் இந்த உள்ளாட்சிக் கான தேர்தலில் பெரும் நெருக்கடிகளை சந்தித்தவராக வும் அவர் இருக்க வாய்ப்பு உண்டு.

இவ்வாறான ஒருவருக்கு இந்த பிரதேச சபைகளில் தவி சாளர், உப தவிசாளர் பதவிகள் கிட்டும் போது அனேகமாக அரசுத்தரப்பின் நீண்டகால நலன்களை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய அவசியம், தேவை அனேகமாக இவர்க ளுக்கு இருக்க வாய்ப்பில்லை.

இதற்கும் மேலாக இந்த பட்ஜெட் தோற்கடிப்புகள் சபையின் ஆளும்தரப்பு உறுப்பினர்களுக்கிடையிலான முரண்பாடுகளால் மட்டுமன்றி, அவர்கள் எல்லோருமே இணைந்து இந்தத் பட்ஜெட் தோற்கடிப்புக்களில் இறங்கினார்களா எனவும் எண்ணத்தோன்றுகிறது.

எது எவ்வாறாயினும் கூட்டுக் கட்சிக்கான தலைமையை விசு வாசித்தல் என்பதில் பிரச்சினை கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதே உண்மையான நிலை மையாகும். இதில் தமது சொந்தக்கட்சிகளின் நலன்களை யும் கவனிக்க முடியாத அளவுக்கு அல்லது அவற்றைப் புறந்தள்ளிக்கொண்டு குறித்த சபை உறுப்பினர் தனது நலன்களை மாத்திரம் முன்நிறுத்தி செயற்படும் போக்கு இந்த பிரதேச சபைகளில் முனைப்பு பெற்றிருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்.

இந்தப் போக்கு, மத்தியில் ஆளும்தரப்பு பிரதேச சபைக- ளின் தலைமைத்துவத்தை கேள்விக்குட்படுத்தி இருப்பதால் அரசுத்தரப்பை இந்த உறுப்பினர் கள் நேசிப்பதற்கான புதிய பொறிமுறையொன்றை இனங்காண வேண்டிய தேவை இப்போது அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

**- சாலையூரான் -**

இந்த நிலை எதிர்காலத்தில் மாகாண சபைகளின் பட்ஜெட் விவாதங்களுக்கும் ஏற்பட்டு[illegible]ா தென உறுதியாக கூற முடியாத நிலை .இருப்பதால் அரசாங்கம் தனது பங்காளிக் கட்சிகளுக்கி டையே உண்மையான, நேர் மையான இணக்கம் பற்றி சிந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

சிந்தனை செயற்பாட்டுக்கு வருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**21600 என்பது...**

• சிதம்பரம் நடராசர் ஆலய மேற்கூரையில் 21,600 தங்க ஓடுகள் வேயப்பட்டுள்ளன.

• ஆவுடையார் கோயில் கருவறை விதானத்தில் 21,600 செப்பு ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன.

• வடலூர் வள்ளல் பெருமான் சன்னிதானத்தில் 21,600 சங்கிலிக் கோர்வைகள் உள்ளன.

இவை அனைத்தும் நாம் ஒவ்வொரு நாளும் வெளிவிடும் 21,600 மூச்சுக்கு சாட்சியாக அமைந்துள்ளனவாம்.

**கோயில் வகைகள்**

கோயில் விமானம் தூயது, கலப்பு, பெருங்கலப்பு என மூன்று வகைப்படும். ஒரே பொருளால் கட்ட்ப்பட்டது தூயது. இரண்டு பொருட்களால் கட்டப்பட்டது கலப்பு. இரண்டுக்கும் மேற்பட்ட பல பொருட்களால் கட்டப்பட்டது பெருங்கலப்பு எனப்படும்.

**வேறு பெயர்கள்**

முக்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், ஞானநகரம், சுத்தநகரம், கௌரிநகரம், தென் கயிலாயம், சோணாச்சலம், சோணகிரி, அண்ணாத்தூர், அண்ணாநாடு, அருணாத்திரி, அருணகிரி, திருவருணை, அருணை... இதெல்லாம் திருவண்ணாமலையின் வேறு பெயர்கள்.

**2012-ஆம் ஆண்டில் இந்தியாவின் ஆறு கோயில்களில் பெற்ற வசூல்கள்:**

திருப்பதி - 1100 கோடி ரூபா.
வைஷ்ணவி தேவி கோயில் - 500 கோடி ரூபா.
சீரடி சாயிபாபா - 305 கோடி ரூபா.
சபரிமலை ஐயப்பன் கோயில் - 179 கோடி ரூபா.
மும்பை சித்தி விநாயகர் கோயில் - 52 கோடி ரூபா.
குருவாயூர் கிருஷ்ணன் கோயில் - 30 கோடி ரூபா.







சீனாவின் ஹூபே (Hubei) மாநிலத்தில் உள்ள மலைப்பகுதியில் ஃபாங்வேங் றெஸ்ரோறன்ட் (Fangweng Restaurant) என்று சொல்லப்படுகின்ற உணவகமொன்று அமைந்துள்ளது.

இந்த உணவகத்தின் சிறப்பியல்பு என்னவென்றால் பெரும்பகுதி மலையில் அந்தரத்திலே அமைக்கப்பட்டுள்ளது. ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தால், பலநூறு அடி உயரமான மலையின் அடிப்பகுதி தெரியும். இதன் நுழைவுப் பகுதியும் மிகவும் தில்லானது. மலையின் செங்குத்தான மேற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள வாசல் மூலமாகவே உள்ளே நுழைய வேண்டும்.

1127-1279 காலப்பகுதியில் மலைவாழ் மக்களின் இருப்பிடமாக இருந்த இப்பகுதி பின்னாளில் சில திருத்த வேலைகளுடன் உணவகமாக மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நூறுகோடி ஆண்டுகளுக்குப் பின்...




உலகத்தின் அழிவு ஆரம்பமாகியுள்ளதாக டென்மார்க் பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானிகள் பீதியை கிளப்பியுள்ளனர்.

அழிவின் இறுதியில் உலகம் இப்போதுள்ள அளவைவிட சிறியதாக பொசுக்கும் தீப்பந்தாக உருமாறிவிடும். மேலும் கிரகங்கள் ஒன்றோடு ஒன்று மோதி நொருங்கி உருத்தெரியாமல் போய்விடுமென்றும் எச்சரித்துள்ளனர். பூமியிலுள்ள மண், கற்கள் போன்ற கனிமங்களும் உருக் குலைந்து விடுமாம்.

பிரபஞ்சம் உருமாறுவதன் வெப்பசக்தி பலகோடி மடங்கு அதிகரிக்கும் என்று கூறும் விஞ்ஞானிகள் உருமாற்றத்திற்கு பிறகு பூமியைப் போன்று வேறு கிரகம் இயங்குவதுடன் மனிதர்களைப் போன்ற உயிரினங்கள் உருவாகும் எனவும் கூறியுள்ளனர்.

சரி இதெல்லாம் எப்போது நடக்கும்? நூறுகோடி ஆண்டுகளுக்குப் பிறகு... அதுவரை கவலை இல்லை.



# டப்பிங் சீரியல் ஏன் பிடிக்கிறது?

- ப. சரவணன் -

சித்தியிலும் மெட்டிஒலியிலும் சரவணன் மீனாட்சியிலும் மயங்கிக் கிடந்த தமிழ்ப் பெண்களின் மனத்தை, "அவள் ஒரு தொடர்கதை", "உள்ளம் கொள்ளை போகுதே", "என் கணவன் என் தோழன்", "தெய்வம் தந்த வீடு", "சிந்து-பைரவி", "இது காதலா", "மதுபாலா" போன்ற டப்பிங் மெகா சீரியல்கள் எப்படிக் கொள்ளையடித்தன?

தமிழ் மெகா சீரியல்களை மாய்ந்து மாய்ந்து பார்த்த, அழுதும் புலம்பியும் பார்த்த பெண்கள் இப்போது டப்பிங் மெகா சீரியல்களை விரும்பிப் பார்க்கத் தொடங்கியதன் காரணங்கள்தான் என்ன?

90களில் நாடகங்கள் தொடர்களாகத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாயின. வாரம் தோறும் அல்லது வாரம் இருமுறை என்ற அமைப்பிலும் 13 வாரத்தொடர் என்ற அமைப்பிலும் வெளிவந்தன. பெரும்பான்மையாக அவை ஸ்டுடியோவுக்குள் மிகக் குறைந்த செலவில் எடுக்கப்பட்டவை. ஒருவிதத்தில் அவை "வீட்டுக்கு வந்த மேடைநாடகங்கள்" என்ற அளவில் இருந்தன.

2000தில் நாடகங்கள் திரைப்படத் தரத்தில் பெருந்தொடராக (மெகா சீரியல்) நாள்தோறும் வெளிவரத்தொடங்கின. அப்போதும் பிறமொழி நாடகங்கள் தரமற்ற மொழிபெயர்ப்பில் வெளிவந்தன. ஆதலால், அவற்றை மக்கள் வரவேற்கவில்லை. அதேவேளையில் தமிழ் மெகா சீரியல்கள் தரமுடன் தயாரிக்கப்பட்டன. வெளிப்புறப் படப்பிடிப்பு, தெளிவான ஒளி-ஒலி, பெண்களின் குடும்பப் போராட்டங்களை மையப்படுத்திய கதையமைப்பு, பாடல்கள், சண்டைக் காட்சிகள் என அவை தம்மைத் திரைப்படங்கள் போலவே பாவித்துக்கொண்டன.

2010களில் பிறமொழி மெகா சீரியல்கள் தமிழில் தரமாக மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவரத்தொடங்கின. குறிப்பாக ஹிந்திமொழி மெகா சீரியல்கள் பல 2013இன் தொடக்கத்தில் தமிழ் மொழியாக்கத்தில் வெளிவரத் தொடங்கின. அவற்றின் தரம் தமிழ்ப் பெண்களைத் தமிழ் மெகா சீரியல்களுக்கு இணையாக ரசிக்கும் அளவுக்குச் செய்துள்ளன.

எந்தெந்த விதத்தில் அவை தமிழ் மெகா சீரியல்களைவிடச் சிறந்துள்ளன?

டப்பிங் மெகா சீரியல்களின் புதுவிதமான கதைதான் தமிழ்ப் பெண்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. தமிழ் மக்கள் அனுபவிக்காத, கேட்டறியாத புதுக்கதைகள். குறிப்பாக, பெரிய இடங்களில் நடந்துகொண்டிருக்கும் உண்மைக்கதைகள்.

சின்னத்திரைக்கதை அமைப்பு யாரும் கணிக்க இயலாத வகையில் திருப்பங்களைக் கொண்டிருக்கும். அவை ஒரு த்ரில்லர் அனுபவத்தைக் கொடுக்கின்றன.

வசன அமைப்பு செறிவாக இருக்கிறது. ஒரே விஷயத்தை ஒவ்வொரு கதைமாந்தரும் ஒவ்வொருவிதத்தில் பேசி போரடிப்பதில்லை. வசனத்தின் குறுக்கே பின்னணி இசை ஒருபோதும் வருவதில்லை.

கதைமாந்தர்களின் உடையலங்காரம், சிகையலங்காரம், பின்னணிக் காட்சி அமைப்பின் பிரம்மாண்டம், கமரா நகர்வு போன்றவை பெரிய பட்ஜெட் திரைப்படத்துக்கு இணையானவை.

ஒரு எபிசோடில் மூன்று காட்சிகளும் ஒவ்வொருகாட்சியிலும் இரண்டுக்கும் குறையாத திருப்பு முனைகளும் இருக்கும். சுவாரஸ்யம் கூடியபடியே இருக்கிறது.

பண்பாடு சார்ந்த வழக்கங்களைத் தற்காலத்துக்கு ஏற்ப முற்போக்காக மாற்றிப் பல காட்சிகளை இடம்பெறச் செய்கின்றனர். இரண்டு குழந்தைகளைப் பெற்ற ஒரு விதவைக்கு மறுமணம் செய்துவைத்தல் போன்றன.

மாமியார் - மருமகள் சண்டைக் காட்சிகள்கூட இயல்பாக, அதிகக் காழ்ப்புணர்ச்சி இன்றிக் காட்டப்படுகின்றன. மாமியார்களை எதிரியாகச் சித்தரிக்கும் போக்கு இருப்பதில்லை.

இயல்பாக இருக்கவேண்டும் என்பதற்காகக் கதைமாந்தர்களின் செயற்பாடுகளை நிதானமாகக் காட்டி, நேரத்தை ஓட்டிப் பார்வையாளர்களுக்கு அலுப்பூட்டுவதில்லை.

எல்லாக் கதைமாந்தர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ட்விஸ்ட் தருவதாக எண்ணித் திடீரென ஒரு புதுக்கதைமாந்தரை அறிமுகப்படுத்திப் பார்வையாளரைக் குழப்புவதில்லை.

பிரிந்துள்ள தம்பதிகள், காதலர்கள் ஆகியோரின் காதல் மற்றும் அன்புறவுகளைச் சின்னச்சின்ன சலனங்களுடன் எடுத்துக் காட்டுவதில் டப்பிங் மெகா சீரியல்கள் உச்சத்தில் நிற்கின்றன.

கதாமாந்தர்களின் குணத்தைப் பிறரின் வசனங்களின் வழியாகத் தெரியப் படுத்தாமல் அந்தந்தக் கதாமாந்தர்களின் செயல்களின் வழியாகவே காட்டுகின்றனர்.

ஒரு எபிசோடில் அத்தியாவசியமான தருணத்தில் மட்டுமே தீம் மியூசிக் வெளிப்படுகிறது.

திருமணம் சார்ந்த விழாக்கள் அனைத்தும் சங்கடங்களின்றி மிகுந்த உற்சாகத்துடன் காட்டப்படுகின்றன. ஆனால், தமிழ் மெகா சீரியல்களோ திருமணக்காட்சிகள் என்றாலேஏகப்பட்ட சண்டைகளும் மனக் கசப்புகளுமாகக் காட்டி "அவைதான் நம் வழக்கம்" என்பதுபோலப் பாவனைசெய்கிறார்கள்.

தற்போது தமிழ்த் தொலைக்காட்சிகள் பரவலாக டப்பிங் மெகா சீரியல்களைப் ஒளிபரப்பத் தொடங்கிவிட்டன. இந்நிலையில், தமிழ் மெகா சீரியல்கள் வீட்டுப்பெண்களின் விரும்பங்களை நிறைவேற்றிச் சின்னத்திரையில் தாக்குப்பிடிக்குமா?

# போருக்குப் பின்னான தமிழ்த் திரைப்படங்கள் 3


- ரதன் -

## A Gun and A Ring

இந்தப் படத்தின் இயக்குனர் லெனின் சிவம். இது இவரது மூன்றாவது படம். இவரது இரண்டாவது படமான "1999" வன்கூவர் சர்வதேச திரைப்படவிழாவில் திரையிடப்பட்டது. இப் படம் இதுவரை மூன்று சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு விட்டது.

தமிழ்ப் படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்படுவது என்பது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது. இந் நிலையில் புலம் பெயர் திரைப்படங்களும் குறும் படங்களும் சர்வதேச திரைப்படவிழாக்களில் பரவலாக திரையிடப்படுகின்றன. 2008இல் Chris Chong Chan Fui ,af;fpa Block B என்ற தமிழ்க் குறும்படம் ரொறண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் சிறந்த குறும்படத்துக்கான விருதைப் பெற்றது. இப் படம் மலேசியாவில் படமாக்கப்பட்டது.


A Gun and A Ring படமும் சங்காய் திரைப்படவிழாவில் சிறந்த படத்துக்கான இறுதிச் சுற்றுக்கு தேர்வாகியிருந்தது. மாற்று சினிமா பற்றி பேசுபவர்கள் கூட்டு முயற்சி பற்றி கூறுவார்கள். அப்படியான ஒரு கூட்டு முயற்சியே இப் படம்




என லெனின் தெரிவித்தார். 14 நாட்களில் 100,000 டொலர்களில் (இன்றைய மதிப்பின் படி 60இலட்சம் இந்திய ரூபாய்கள்) இப் படத்தை தயாரித்துள்ளார்கள். Post Production இற்கு மட்டும் 35ஆயிரம் டொலர்கள் செலவளித்துள்ளார்கள். இப் படத்தில் நடித்த ஒரு நடிகருக்கு மாத்திரமே ஒரு நாளைக்கு 150 டொலர் படி நான்கு நாட்களுக்கு 600 டொலர்கள் கொடுக்கப்பட்டது. அனைத்து சகல நடிகர்களும் இலவசமாகவே நடித்துள்ளனர். ஒளிப்பதிவாளரும் பணம் எதுவும் வாங்கவில்லை. இவ்வாறான கூட்டு முயற்சியே இப் படத்தை சங்காய், மொன்றியல் போன்ற சர்வதேச திரைப்படவிழாவிற்கு கொண்டு சென்றுள்ளது.

ஒரு காலத்தில் ஈழப் போரில் பங்குபற்றிய முன்னாள் போராளி இன்று குடும்பத்துடன் ரொறண்ரோவில் வாழ்கின்றார். இவர்களது மகன் ஒரு பாலியலாளர். இவர் தற்கொலை செய்து கொள்கின்றார். இப் போராளியால் பாதிக்கப்பட்ட இளைஞன். ஊருக்கு நல்லது செய்யும் ஒரு புலம் பெயர் சமூக முக்கியஸ்தர். இவரது மனைவி ஈழத்தில். இவர்களது சிறு மகள். இச் சிறுமகள் பங்களாவிற்கு வரும் பொழுது அச் சிறுமியை பாலியல் வல்லுறவு செய்ய விரும்பும் வெள்ளை இனத்தவர். போரால் பாதிக்கப்பட்ட பெண்ணைத் தான் திருமணம் செய்வேன் எனக் கூறி ஒரு பெண்ணை ஊரில் இருந்து அழைத்து அப் பெண் விமான நிலையம் வந்த போது அவளை சென்று கூட்டி வராத மற்றொரு புரட்சி இளைஞன். இப் பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்து விட்டு தனது மகளுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்க முயலும் பெண். வெள்ளை இனத்தவன் சிறுமியை கடத்த முயல்கின்றான் எனத் தெரிந்தும் தான் சாதனை செய்வதற்காக சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கும் பொலிஸ் அதிகாரி. அதனால் அச் சிறுமி வெள்ளை இனத்தவனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகி கொலையும் செய்யப்படுகின்றாள்.

போரால் பாதிக்கப்பட்டு Shelter எனப்படும் பாதிக்கப்பட்டவர்களின் தங்குமிடத்தில் தங்கியிருக்கும் சூடான் நாட்டு இளைஞன். இவர்களின் வாழ்வியல் சம்பவங்களை வெளிப்படுத்துவதே இப் படம். ஏதோவொரு சங்கிலி போல் இவர்களுக்குள்



இணைப்பு ஏற்படுகின்றது.

முன்னாள் போராளியின் நடவடிக்கைகள் கோவிந்தனின் புதியதோர் உலகம் நாவலை நினைவு படுத்துகின்றது. போராளியாக கங்கா இயல்பாக நடித்துள்ளார். போராளியாக துப்பாக்கியுடன் பயணிப்பவன் தனது இயல்பு நிலைக்கு மாற பல காலம் செல்லும். இங்கு மனைவி மகன் என இயல்பு நிலைக்கு மாறி சில காலங்கள் வாழ்ந்த பின்னரும் அடி மனதில் இவரது வன்முறை வாழ்வு இவரை விட்டுச் செல்லவில்லை. லெனின் இதனை ஒரு தனது மனச்சாட்சியின் வெளிப்பாடாக ஒரு தமிழ்ப் போராளியின் உள உளைச்சலின் பாதிப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. சிங்கள இராணுவ வீரர்களின் நிலை என்ன? இவர்களிடமும் இந்த உளவியல் தாக்கங்கள் இருக்கும். இவர்கள் நாளை இயல்பு நிலைக்கு மாறி சமூகத்தில் வாழமுடியுமா? இதனை லெனின் கேள்வியாக கூறவில்லையாயினும் இப் பாத்திரத்தின் பன்முக பரிமாணமாக வெளிப்படுகின்றது. இன்று தமிழ்ப் பிரதேசங்களை சுற்றி நிற்கும் இராணுவத்தின் மீதும் இக் கேள்வி எழுகின்றது.

நீண்ட காலமாக உலகம் இவ்வாறான கேள்விக்கு விடை தேட முயற்சிக்கின்றது. அமெரிக்க இராணுவ வீரர்களின் போரின் பின்னால் உள்ள வாழ்வின் கொடூரங்களை பல படங்கள் பதிவு செய்துள்ளன.

(தொடரும்)








# வளர்ச்சி கண்டுவரும் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி



வர்ண இரவு நிகழ்வில் விருது பெறுதல்

நவீன தொழிநுட்பவசதிகள், பௌதீக வசதிகள் என்ற காலத்தின் வளர்ச்சிப் போக்கில் மிகவும் உன்னதமான நிலையில் 2014 ஆம் ஆண்டு தனது 138 ஆவது ஆண்டில் கால்பத்தித்து நிற்கும் சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி.

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் கல்வியும் சைவ நெறியும் வளர்ச்சி அடைவதற்கு தலங்கள் தோறும் பள்ளிக்கூடங்களை அமைத்தார்கள். இதனால் இந்துசமயக் கொள்கையை நிலைநாட்டவும் ஆங்கிலக் கல்வியை அளிக்கக்கூடிய வகையில் 1876 ஆம் ஆண்டு சைவப்பிள்ளைகளுக்கான ஆங்கிலப் பாடசாலை என்ற நோக்கோடு பெரியார் நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியாரால் தனது வீட்டில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு பிற்காலத்தில்அவரது மகனான செல்லப்பா அவர்களினால் முகாமை செய்யப்பட்டது.


பெண்கள் கிரிக்கெட் அணி

1875ஆம் அண்டு பிரித்தானிய மகாராணியின் மூத்த மகனாகிய உவேல்ஸ் இளவரசர் ஏழாம் எட்வேட் வருகையில் ஏற்படுத்திய உணர்வினாலும்1876 ஆம் ஆண்டு நிறுவிய இப்பாடசாலைக்கு விக்ரோறியா மகாராணியின் பெயர் சூட்டப்பட்து.

இக்காலத்தில் பல கிறிஸ்தவ அதிபர்கள் பல சைவப் பாடசாலைகளுக்கு அதிபராக இருந்தார்கள். ஆங்கிலேயர்களும் பலர் கடமைகளை ஆற்றினார்கள் அந்த வரிசையில் இப் பாடசாலையில் முதலாவது அதிபராக அயர்லாந்து நாட்டைச்சேர்ந்த விலோபி சிமோல் 1896 ஆம்ஆண்டு பதவியேற்றார்.

இதன் தொடர்ச்சியாக சிமோல் 1896 ஆம் ஆண்டு தொடக்கம 1918ஆம் ஆண்டுவரை தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய பின் சேர். பொன். இராமநாதனுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படும் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அக்காலத்தில் B.A பட்டம்பெற்ற ஒரு அதிபராகக் கடமையாற்றினார்.

இக்காலத்தில் அரச உதவி பெறும் பாடசாலைகளை அரசு 1961 ஆம் ஆண்டு தன்வசம் ஆக்கிக் கொண்டது. இருந்தும் 1892 இல் இப் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையாக பதியப்பட்டு பின் இதனை அரசாங்கம் 1946 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக்கொண்டது.

இப் பாடசாலையானது இன்று மட்டுமல்ல முன்னைய காலங்களிலும் தனது செயற்பாடுகளை திறம்பட ஆற்றியது. இந்தவகையில் 1899 ஆம் ஆண்டு யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இப்பாடசாலைக்கும் இடையில் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது. அத்துடன் 1898 ஆம் ஆண்டில் முதன்முதலில் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

இப் பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழாவானது 1905 ஆம் ஆண்டு நடைபெற்றதுடன் இதற்கு இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் கென்றிபிளக் மனைவியுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட றிச்வே மண்டபத்தையும் திறந்து வைத்தார்கள்.

இக் கல்லூரியானது பல அறிஞர்களையும், அரசியல்வாதிகள், நீதிமான்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் எனப்பலரையும் உருவாக்கியதுடன் இப்பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு முதன் முதலாக உள்நுழைந்த மாணவனாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் 1945 ஆம் ஆண்டு தெரிவானார்.

இவ்வாறான பல திறன்களையும் வளர்த்து பல சாதனைகளையும் படைத்து நிற்கும் இக்கல்லூரியானது தற்போது வடமாகாணத்தில் உள்ள வலிகாமம் வலயத்தில் சகல வசதிகளுடன் கூடிய இசுறு திட்டதின் கீழ் உள்வாங்கப்பட்ட ஒரு 1AB பாடசாலையாகக் காணப்படுகின்றது.

இப் பாடசாலையின் அதிபர்கள் வரிசையில் ஒரு பெண் அதிபரும் தனது கடமையை திறம்பட ஆற்றியுள்ளார். தற்போது இக் கல்லூரியின் அதிபராக வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன் கடமையாற்றுவதுடன் 50இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் 1000இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு திறம்பட செயற்பட்டுவருகின்றது.

இக்கல்லூரியானது கலவன் பாடசாலையாக இருந்த போதிலும் இங்கு பெண்பிள்ளைகளின் சாதனைகளும் அதிகம் காணப்படுகின்றது. அந்த வகையில் கல்விச்செயற்பாடுகளில் மட்டுமல்லாது விளையாட்டுப்போன்ற இணைபாடவிதான செயற்பாடுகளிலும் அவர்களது சாதனைகள் தொடர்கின்றது. கடந்த நான்கு வருடங்களாக பெண்கள்கிரிக்கெட் அணியினர் மாகாண மட்டத்தில் முதலாம்


பெண்கள் எல்லே அணி வீரர்கள்

இடத்தினைப் பெற்றதுடன் மெய்வல்லுநர் நிகழ்வுகளிலும் தேசியமட்டம் வரை தங்களது சாதனைகளையும் பல நிழ்வுகளையும் புரிகின்றனர்.

**மகுடவாக்கியம்**

'MANNERS MAKYTH THE MAN'



**அதிபர்**
**வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன்**

**நோக்கம்**

மாறிவரும் நவீன உலகில் அறிவியல் தொழிநுட்ப மாற்றங்களைப் புரிந்து எமது பாரம்பரிய விழுமியங்களைப் பேணக்கூடிய நற்பிரஜைகளை உருவாக்குதல்.

தொகுப்பு:-
**கி. கிருத்திகா**
ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ். பல்கலைக்கழகம்


15 வயது பிரிவு கரப்பந்தாட்ட அணி ஆண்கள்


கல்வி அமைச்சருடன் ஆசிரியர் குழாம்


பான்ட் வாத்தியக்குழுவினர்

# பண்ணை ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பது குறித்து ஆராய்வு

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இருந்து பண்ணைதாம் போதி ஊடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லுகின்ற பிரதான வீதியானது காபெற் வீதியாக மாற்றி அமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான ஆரம்ப வேலைகள் யாவும் தொடங்கப்படவுள்ளன.

இவ்வாறான காபெற் வீதியினை பொதுமக்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் பொதுஸ்தாபனங்கள் உயர் அதிகாரிகள் ஆகியோர்களினது அறிவு ஆற்றல் அனுபவங்களை அறிந்து கொண்டு அதற்கமைவான வேலைகளை தொடங்குவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை காலை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினது பொறியியலாளர், மகா நிறுனத்தின் பிரதிநிதி, வேலணை பிரதேசசெயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஷன், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி மீரா திசநாய கம்பிள்ளை,வேலணை பிரதேச சபையினது உறுப்பினரான பா. தவபாலன், உட்பட பொது நிறுவனங்களினது பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரத்திணைக்களத்தின் அதிகாரி உரையாற்றுகையில், மேற்படி யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியினை காபெற் வீதியாக மாற்றி அமைப்பதற்கு பொது மக்களினதும் அதிகாரிகளினது ஆதரவு, ஒத்துழைப்புக்களும் எமக்கு அதிக அளவில் தேவைப்படுவதினால் அவ்வாறு ஒத்துழைப்புக்களும் கிடைக்குமாயின் வெகு விரைவில் இந்த வீதி காபெற் வீதியாக மாற்றி அமைக்கப்படும் என்று கூறினார்.

அடுத்து மகா. நிறுவனத்தின் பிரதிநிதி உரையாற்றுகையில், இந்த வீதித்திருத்தத்தினை மேற்கொள்ளும் போது உள்ளூர் இளைஞர்கள்,யுவதிகளை இணைத்தே மேற்கொள்வதற்கு ஆலோசித்துள்ளேன் என்றும் கூறிய அவர் அவ்வாறு வேலைகளை செய்வதற்கு போதியளவு வேலையாட்கள் கிடைக்காத பட்சத்தில் தென்இலங்கையில் இருந்து வேலையாட்களை கொண்டுவந்தே வேலைகளை ஆரம்பிக்க சந்தர்ப்பங்கள் ஏற்படலாம் என்றும் கூறினார். அத்துடன் இந்த வீதியின் வேலைத்திட்டங்கள் யாவும் (20) இருபது மாதங்களுக்குள் முடிக்கப்படவேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (05)




தென்மராட்சி அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயத்தில் பதவியுயர்வு, ஓய்வு நிலை இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் அதிபர் ஒருவர் கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (11)

## வெள்ளி நற்சிந்தனை...



# பசுக்களை வளர்ப்போம்; பயன் பெறுவோம்

ஒழுக்க கோட்பாடுகளே "தர்மம்" என்று அழைக்கப்படுகிறது. கடவுளின் கட்டளைகள் தான் ஒழுக்க கோட்பாடுகள். இறைவன் எதற்காக நம்மைப் படைத்திருக்கிறானோ, அந்தப் படைபபின் நோக்கத்தை நாம் பூர்த்தி செய்ய வேண்டும்.

பக்தி இல்லாமல் செய்யப்படும் காரியங்களை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை. நோக்கம் தான் பிரதானம் ஒரு மனிதனின் நோக்கத்தையே இறைவன் பிரதானமாகக் கவனிக்கிறான். தனக்குப்புகழ் வேண்டும் எனபதற்காகவோ, பாராட்டுதலைப் பெற வேண்டும் என்பதற்காகவோ, காரியங்களைச் செய்து கொண்டிருக்கக் கூடாது.

தட்சன் யாகம் செய்தான், பாவங்களை நீக்குவதற்காகத்தான் அதைச் செய்தான். ஆனால அதன் நோக்கம் என்ன? சிவபெருமானின் ஆணையை மீறும் வகையில் தான் இவை எல்லாம் செய்தான்.

ஒரு கத்தியை மருத்துவர் உபயோகிக்கிறார்: கொலைகாரனும் உபயோகிக்கிறான். உபயோகிக்கப்படுவது கத்தி தான் என்றாலும். கொலைகாரனின் செயல் தண்டனைக்கு உரியதாகிறது. மருத்துவரின் செயல் நோயாளியைக் குணப்படுத்துவது: அது பாராட்டுக்குரியதாகிறது.

சண்டேஸ்வர நாயனார் தந்தைக்குச் செய்யும கடமையை விட கடவுளுக்குக் காட்டும் மரியாதையே முக்கியமானது என்று கருதினார். சிவனைப் பூஜிக்கும் இடத்தை தந்தை அசுத்தப்படுத்தினார் என்பதற்காக, சண்டேஸ்வரர் தந்தையையே தாக்கத் துணிந்தார். சண்டேஸ்வரரின் பக்தி பாராட்டுக்குரியதாகிறது. சிவாலயங்களில் சண்டேஸ்வரருக்கு சிறப்பான இடம் உண்டு. கோயில் சொத்துக்கு சண்டேஸ்வரரே பொறுப்பாளி ஆகிறார்.

பசுக்களைப் பராமரிப்பதில் சண்டேஸ்வரர் மிகவும் விருப்பம் உடையவராக இருந்தார். பசுக்களைப்பராமரிக்கத் தவறிவிடும் இடையர்களைக கோபித்துக் கொள்வார். பசுவின் பாலை அவர் லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். பாலை அவர் வீணாக்குவதாக மற்றையவர்கள் குறை சொன்ன போது. அவர் பொறுமையாகத் தியானத்தில் இருந்தார். சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய அவர் வைத்திருந்த பாலை, தந்தை உதைத்து கழே உருட்டிய போது தான் அவர் கோபமுற்றுத் தந்தையின் காலை வெட்டினார். சிவ நிந்தைக்கு தண்டனை ஒரு பக்தனால் கொடுக்கப்பட்டது என்பதே வரலாற்றின் கருப்பொருளாகும்.

இனிய பொங்கல் தினம் வருகிறது. பசுக்களை காக்கும் நற்செயலில் ஈடுபட வேண்டும். பசுக்களைப் பராமரித்தல் சிவபக்தியேயாகும். நமது பிரதேசத்தில் பசுக்களின் தொகை மிகவும் குறைவு, ஒரு பசு, ஒரு குடும்பத்தைக் காக்கும் என்பார்கள் வீணாய்ப் பொழுதினைப் போக்காமல் பசுக்களை வளர்க்கும் திட்டத்தைச் செயற படுத்த முன்வாரீர்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

பாகிஸ்தான் 1947இல் இந்தியாவில் இருந்து பிரிந்து தனி நாடாகிய பொழுது பீகார் மாநிலத்தில் வாழ்ந்த பீகாரி முஸ்லிம்கள் பீகார் மாநிலத்துக்கு அண்மையில் இருந்த அன்றைய இந்தியாவின் கிழக்கு வங்காளத்துக்கு சென்றாரகள். கிழக்கு வங்காளம் பாகிஸ்தானின் ஒரு ஆட்சிப் பகுதியாக [கிழக்குப் பாகிஸ்தானாக] இருந்தது. 1971 மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்கும் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாய் கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் என சுதந்திர நாடாக உருவானது. இந்த யுத்தத்தில் கிழக்கு வங்கத்தில் [கிழக்கு பாகிஸ்தான்] வாழ்ந்த பீகாரி முஸ்லிம் மக்கள் மேற்கு பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஆதரவளித்தார்கள், பாகிஸ்தான் இராணுவம் இவர்களைக் கைவிட்டு விட்டு சென்று விட்டனர். தனி நாடான பங்களாதேஷ் இவர்களை அரவணைக்கவில்லை, மொத்தத்தில் இறுதியில் இரு நாடுகளும் கைவிட்ட சமூகமாக இவர்கள் பிரஜா உரிமையற்ற ஏதிலிகளாக மாறிப் போயினர்.

**– எஸ்.எம்.எம்.பஷீர்**

கடந்த பல தசாப்தங்களாக, மேற்கத்திய நாடுகள் புகலிடம் கோரும் அகதிகளை சிறைகளில் அடைத்து வைக்கின்றன. அவுஸ்திரேலியாவுக்கு படகுகளில் சென்ற, ஏராளமான ஈழத் தமிழ் அகதிகள், சிறை முகாம்களில் தடுத்து வைக்கப் படுகின்றனர். ஒருவர் குற்றமேதும் செய்திருக்கா விடினும், அதை தடுப்பதற்காக முன்கூட்டியே சிறையில் அடைத்து வைக்கும் சட்டம், ஆங்கிலத்தில் Preventive detention (P.D.) என்று அழைக்கப் படுகின்றது.

இந்த P.D. தடைச் சட்டம், முதன்முதலாக ஜேர்மன் நாஸிகளினால், 1933 ஆம் ஆண்டு இயற்றப் பட்டது என்ற விபரம் பலருக்குத் தெரியாது. இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர், சோஷலிச கிழக்கு ஜேர்மனியில் அந்த சட்டம் நீக்கப் பட்டது. பொதுவாகவே, நாஸி சட்டம் எதுவும் செல்லாது என்று, சோஷலிச ஜெர்மனி அறிவித்திருந்தது. ஆனால், "ஜனநாயக[?]" மேற்கு ஜெர்மனியில், நாஸிகளின் சட்டங்கள் யாவும் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டன. அதில் இந்த தடைச் சட்டமும் ஒன்று. தற்போது, பல மேற்கத்திய "ஜனநாயக [?]" நாடுகளில், இந்த நாஸி சட்டம் பின்பற்றப்படுகின்றது.

**– கலையரசன் தா.**

சீனாவுக்கு உண்மையாகவே இந்தியா பதிலடி கொடுக்க வேண்டும் என்றால், நாம் முறுக்கிக்கொண்டு நிற்க வேண்டிய இடம் எல்லை அல்ல. பொருளாதாரம். சீனாவுக்குப் பொருளாதாரரீதியாக இந்தியா அடிமையாகிக்கொண்டிருப்பது பலராலும் கவனிக்கப்படாதது. 2002இல் 200 கோடி டொலராக இருந்த சீனாவுடனான இந்தியாவின் வணிகம் 2012இல 6500 கோடி டொலராக அதிகரித்து இருக்கிறது. உலகமயமாக்கலின் அனுகூலத்தை முழுமையாக அறுவடை செய்தாலும், சீனா எப்போதும் சீனத்தன்மையுடனேயே இருக்கிறது. சீனாவில் ஓடும் சைக்கிள்களில் தொடங்கி கார்கள் வரை உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களே சீனாவை ஆள்கின்றன.

உலகத்துக்கு வால்மார்ட் என்றால் சீனாவுக்கு உமார்ட். உலகத்துக்கு கூகுள் என்றால், சீனாவுக்கு பைட். உலகிலேயே லாபகரமாக இயங்கும் பெரிய விமான நிறுவனங்களில் ஒன்று எயார் சீனா. எயார் இந்தியாவின் நிலை என்ன என்பது நமககுத் தெரியும். இந்தியச் சந்தைகளில் விற்பனையாகும் சரி பாதிப் பொருட்கள் சீனாவுடையது. இந்திய உற்பத்தித் துறைககான நான்கில் ஒரு பங்கு பொருட்கள் சீனாவில் இருந்தே இறக்குமதி ஆகின்றன. நவீன உலகில் ஆக்கிரமிப்பு என்பது நிலம் சார்ந்தது மட்டும் அல்ல.

**– சமஸ்**

ஐம்பதாண்டுகள் முன்பு தலாயின் பிரதானமாக நிலப்பிரபுத்துவமாக இருந்த ஆட்சியைக் கவிழ்த்து அவரை இந்தியாவில் தஞ்சம் புக வைத்தனர் சீன ஆட்சியாளர்கள். அடுத்த மூன்றாண்டுகளில் நடந்த இந்திய-சீனப் போர் வேறு...

இந்த ஐம்பதாண்டுகளில் தலாய் லாமா உலகைச் சுற்றி வந்ததுதான் மிச்சம் - அவருக்கு ஹொலிவுட் வரை சீடர்கள் கிட்டினார்கள், ஆனால் திபெத்துக்கு விடுதலை என்ற கனவு பலிக்காமல் போனது. பத்தாண்டுகள் முன்பு இந்தியா அணு குண்டுப் பரிசோதனை நடத்தியபோது பௌத்தரான தலாய் அதை வரவேற்பதைக் காணவும் முடிந்தது... உலக அரங்கில் சீனாவின் வல்லரசு-அதிகாரத்தை அது குறைக்காதா என்ற நப்பாசைதான் காரணம்! உலக அரசியலின் பல்வேறு அபத்தங்களில் இதுவும் ஒன்று.

**– நாகார்ஜ"னன்**

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## திருமூர்த்தி சேந்தன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

கணிதப் பிரிவு -2AC

மாவட்ட நிலை :50



நான் இப்பெறுபேற்றை பெற்றதை யிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஆரம்பக் கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று க.பொ.த சாதாரண தரத்தில் 9ஏ சித்திகளைப் பெற்று உயர் தரத்தில் கணிதப் பிரிவில் கற்பதற்கு விக்ரோறியாக் கல்லூரியில் எனது கல்வியை ஆரம்பித்தேன்.

எனது தந்தை விவசாயியாவார் தாய் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

நான் பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்விநிலைய கல்வியையும் மேற்கொண்டு இப்பெறுபேற்றினைப் பெற்றேன் இதற்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு நன்றிகளைத தெரிவிப்பதுடன் எனது கணித பாட ஆசிரியர் பிரவீந்திரனுக்கும நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## சாருஜா செந்தில்நாதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

கணிதப் பிரிவு -2AB

மாவட்ட நிலை : 45

தேசிய நிலை : 792



நான் பெறுபேற்றினை பெறுவதற்கு கடந்தகால பயிற்சி வினாக்களும் எனது விடாமுயற்சியும் மிகவும் உதவியது.

நான் ஆரம்பக் கல்வியை சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்திலும் க.பொ.த சாதாரண தரத்தை யாழ்ப்பாணக் கல்லூரியில் 7ஏ2பி பெறுபேறுகளைப் பெற்று உயர்தரத்திற்கு விக்ரோறியாக் கல்லூரியில் கணிதப் பிரிவில் கற்றேன்.

எனது தந்தை விவசாயியாவார் எனது பெற்றோரின் கவனிப்பும் ஒத்துழைப்புமே எனது கற்றலுக்கு துணையாக அமைந்தது.

நான் இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு காரணமாக அமைந்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## கார்த்திகா இந்திரகுமாரன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

கணிதப் பிரிவு : A2B

மாவட்ட நிலை : 83

தேசிய நிலை : 1428



தொடர்ச்சியான கற்றலின் மூலம் இவ்வாறான பெறுபேறுகளைப் பெற முடியும் என்பதனை சாதகமாக்கி கல்வியை தொடர்ந்தால் முன்னேறலாம்.

நான் ஆரம்பக் கல்வியை மு.விஸ்வமடு மகாவித்தியாலயத்தில் பயின்று இடைநிலைப்பிரிவை விக்ரோறியாக் கல்லூரியில் தொடர்ந்து க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வியைக் கற்று 7ஏ2பி என்ற பெறுபேற்றுடன் எனது உயர்தரத்திற்கான கணிதப் பிரிவை தெரிவு செய்து கற்றேன்.

எனது தந்தை விவசாயியாவார். அவரின் ஒத்துழைப்பே எனது கல்விக்கு துணையாக இருந்தது. நான் இவ்வாறான நிலையை பெற்றமைக்கு எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## தர்சிகா தெய்வேந்திரன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

கலைப் பிரிவு -A2B

மாவட்ட நிலை : 41

தேசிய் நிலை : 1365



கூடிய கவனத்துடன் விடாமுயற்சியும் இருந்தால் அதிஉயர் பெறுபேற்றினைப் பெறலாம்.

நான் ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் பயின்று க.பொ.த சாதாரண தரத்தை விக்ரோறியாவில் கல்விகற்று அதில் 7ஏ2பி பெறுபேற்றினைப் பெற்று உயர்தரத்திற்கு கலைப்பிரிவினை தெரிவுசெய்தேன்.

எனது தந்தை அலுவலகப் பணியாளராக கடமையாற்றுகிறார். எனது தந்தையின் கவனிப்பினாலேயே நான் இப்பெறுபேற்றை பெறமுடிந்தது.

இப்பெறுபேறுகளை பெறுவதற்கு உதவிய ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

முயற்சியும் தன்னம்பிக்கையும் இறைபக்தியும் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் தமது சாதனை பகிர்வை தினமுரசில் வெளியிடவிரும்பினால் 0777193264, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொகுப்பு : கிருத்திகா.கே

# இடம்பெயர்ந்து அல்லலுறுவோர் விரைவில் மீள்குடியேற்றம்



நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கும் இறுதி ஆண்டாகவே இந்த ஆண்டு விளங்கும் கடந்த காலத்தில் இடம் பெயர்ந்து இதுவரை காலமும் தமது பிரதேசங்களில் மீளக் குடியேற்றம் செய்யப்படாதுள்ள மக்கள் விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கோணாற்புலம் நலன்புரி நிலையம்1, கோணாற்புலம் நலன்புரி நிலையம்2, ஊரணி நலன்புரி நிலையம், தும்புத்தொழிற்சாலை நலன்புரி நிலையம், தும்பளை நலன்புரி நிலையம் ஆகிய நலன்புரிநிலையங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அவசரதேவைகளுக்கு வழங்கப்படும் உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் கடந்த காலங்களில் யுத்த வடுக்கள் மற்றும் இடப்பெயர்வு என்பவற்றினால் குறிப்பிட்ட பிரதேச மக்கள் மிகவும் பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல ஈடுகொடுக்க முடியாத இழப்புக்களையும் எமது தமிழ் மக்கள் சந்தித்துள்ளார். கள் தற்போது அவர்கள் தங்களது சொந்த மண்ணில வாழ்வதற்குரிய வசந்த காலம் வந்துள்ளது எனவே அனைத்து மக்களும் தத்தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு அவர்களின் அடிபபடைத் தேவைகளான வீடு, வாழ்வாதாரம், கல்வி, போக்குவரத்து ஆகிய அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார்.

இந்நிகழ்வில், தெல்லிப்பளை பிரதேசசெயலர், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் வடக்கு இணைப்பாளர் அன்பு, தெல்லிப்பளை உதவித்திட்டப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொணடனர்.

## புலிமுகச் சிலந்தியுடன் ஜேர்மன் நாட்டவர் கைது



(கொழும்பு)

பலாங்கொட பொலிஸ் பிரிவில் கிரிமெட்டிஓயப் பகுதியில் புலி முகச்சிலந்தி வைத்திருந்த வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடம் இருந்து இறந்த நிலையில் இரண்டு புலிமுகச் சிலந்திகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் பலாங்கொட நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

# பேராதனை பல்கலைக்கு இம்முறை 3000 மாணவர்கள்

(கொழும்பு)

இம்முறை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள 8 பீடங்களுக்கும் புதிதாக சுமார் 3,000 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இவ்வாறு உள்வாங்கப்படவுள்ள புதிய மாணவர்களை பகிடிவதைகளிலிருந்து பாதுகாப்பதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது புதிய மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன, பேராசிரியர் சார்[illegible] சேனநாயக்க ஆகியோர் தன[illegible]மையில் 8 பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பீடாதிபதிகள், ஒழுக்காற்று பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதான அதிகாரிகள், விரிவுரையாளர்களஎனப் பாதுகாப்புத் தொடர்புடைய பல அதிகாரிகள் இக்குழுவில் அங்கம் வகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலேரியாவை முற்றாக ஒழிக்க நுளம்பு வலைகள் விநியோகம்

(கொழும்பு)

மலேரியாவை முற்றாக ஒழிக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மலேரியா தடுப்புப்பிரிவுடன் இணைந்து சர்வோதயம் அமைப்பினால் மலேரியா விழிப்புணர்வுக் கருத்துப் பகிர்வும் ஆறாயிரம் நுளம்பு வலைகள் வழங்குதலும் நடைபெற்றன.

மட்டக்களப்பு வலையிறவு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் வ.ரமேஸ்குமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிராந்தியத்துக்கான மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி மேகலா ரவிச்சந்திரன், சர்வோதயத்தின் கிழக்குப் பிராந்திய இணைப்பாளர் ,எல். ஏ.கரீம், உள்ளிட்டோரும், கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



மட்டக்களப்பின் வலையிறவு பிரதேசத்திலுள்ள 900 வரையானோருக்கு இந்த நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் மலேரியாவைத் தடுக்கும் நோக்கில் சுகாதாரத்திணைக்களத்தின் பணிப்பின் பேரில் சர்வோதயத்துடன் இணைந்து மலேரியா தடுப்புப்பிரிவினரால் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

5) சதுரமுகி ஒன்றினது அனைத்து முகங்களினதும் மொத்தப்பரப்பளவு $54cm^2$ ஆகும் எனின் ஒரு முகத்தினது பரப்பளவு எத்தனை சென்றிமீற்றர் ஆகும்?

.............................................

6) 2250ml தேங்காய் எண்ணெய்யை 450ml கொண்ட சிறிய குப்பிகளில் ஊற்றப்பட்டது. எனின் அதற்குத் தேவைப்பட்ட குப்பிகள் எத்தனை? .............................................

7) மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமான தையல் பயிற்சி வகுப்பானது மு.ப. 11.45 மணிக்கு முடிவுற்றது எனின் தையல் பயிற்சி வகுப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு?

.............................................

8) இடைவெளி நிரப்புக.

38403 = 30.000 + 8000 + ................ + 0 + 3

9) ரூபா 225.00 இற்கு ரம்புட்டான் பழமும் . ரூபா 305.00 இற்கு வாழைப்பழமும் வாங்கி ரூபா 1000.00 தாள்காசை கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.............................................

10) குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை சமைக்க 2kg 250g அரிசிதேவையாகும். 9kg அரிசி அக்குடும்பத்திற்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்?

.............................................

11) இங்கிலாந்தில் நண்பகல் 12.00 மணி ஆக இருக்கும் போது இலங்கையில் நேரம் பி.ப. 6.00 ஆகும். இங்கிலாந்தில் மு.ப. 10.15 இற்கு ஆரம்பமாகும் கிரிக்கட்போட்டி ஒன்றின் நேரடி ஒளிபரப்பை இலங்கையில் எத்தனை மணிக்குப் பார்க்கலாம்?

.............................................

12) மாத்தறையிலிருந்து காலி ஊடாக கொழும்புக்கு உள்ள தூரம் யாது?

.............................................

| | காலி | கொழும்பு | கண்டி |
|---|---|---|---|
| கொழும்பு | | | 116km |
| காலி | | 116km | 232km |
| மாத்தறை | 45km | ....?.... | ....?.... |

13) மாத்தறையில் இருந்து கொழும்பு ஊடாக கண்டிக்குள்ள தூரம் யாது? .....................

**(14) நாளும் எனது நண்பர்களும் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மைதானத்தில் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தோம். திடீரென எனது நண்பர்களில் ஒருவனான நேசன் விழுந்துவிட்டான் எல்லோரும் அவனை சூழ்ந்துகொண்டோம்.... இதனை தொடர்ந்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்புசரியாக இருக்க வேண்டும்.**

01. .............................................

02. .............................................

03. .............................................

04. .............................................

05. .............................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(1) பின்வரும் பந்தியை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தொடர்ச்சியான மழையின் காரணமாக மக்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருந்தனர். பள்ளிக்குச் செல்வதென்றாலும், உடுதுணிகள் காயவைப்பதென்றாலும் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது உடமைகளை இழந்து தரையில் வந்து தவிக்கும் மீன்கள் போல மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அலைந்து திரிகின்றனர். நல்லதோர் விடியலுக்காக வானை அண்ணார்ந்து பார்க்கின்றனர். வானம் சிரிக்கத்தொடங்குகிறது மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி அங்குமிங்குமாக ஓடி தமது வேலைகளை செய்ய ஆரம்பிக்கின்றனர்.

1. மகிழ்ச்சி என்ற சொல்லுக்கான எதிர்சொல்லைத் தருக? .............................................
2. மக்கள் என்ற சொல்லின் ஒத்தசொல்லை தருக? .............................................
3. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக? .............................................
4. "வானம் சிரிக்கத் தொடங்குகிறது" என்பதால் விளக்கம் பெறுவது என்ன? .............................................
5. பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றைக் குறிப்பிடுக? .............................................
6. பந்தி குறிப்பிடும் இயற்கையழிவு ஒன்றை குறிப்பிடுக? .............................................
7. தமது வேலைகளை செய்ய ஆரம்பிக்கின்றார்கள்' என்பதை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக?

.............................................

8. பந்தியில் இடம் பெற்றுள்ள வினை அடைமொழியைக் குறிப்பிடுக? .............................................

**(2) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**

1. உலகில் / இன்றைய / சமைத்துச் / உணவு / நேரமில்லை / சாப்பிடுவதற்கு

.............................................

2. தங்குவதற்கு / இடம் / வைத்தியர் / கொடுக்கப்பட்டது / ஒதுக்கிக்

.............................................

**(3) இடைவெளி நிரப்புக.**

1. மயிலுக்கு குழாம் என்பது போல பசுவிற்கு .............................................
2. கிளிகள் கீச்சிட்டன என்பது போல ஆந்தைகள் .............................................

**(4) பின்வரும் பழமொழிகளின் கருத்தைக் குறிப்பிடுக.**

1. பட்ட காலிலே படும் .............................................
2. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி .............................................

**(5) பின்வரும் வாக்கியங்களில் இடம் பெறும் தடித்த சொற்றொடர்களின் பொருளைக் குறிப்பிடுக.**

1. இன்றைய மாணவர்கள் கல்வி கற்பது **நுனிப்புல் மேய்தல்** போன்ற செயலாகும். ..............................
2. எனது முன்னேற்றத்தைக்கண்டு **வயிற்றெரிச்சல்** படுவதுண்டு. ..............................

**(6) பின்வரும் வாக்கியத்துக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. மெய் வாய் கண் மூக்கு செவி என்ப ஐம்பொறிகளாகும்
2. நலமுடன் வாழ்க

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. பிரி சுது வதுர .............................. 2. கபுடா பியாம்பை ..............................

**(8) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. pure water .............................. 2. today is holiday ..............................

**(9) பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**




.............................. ..............................

**(10) பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. சுதந்திரதியானம், சுதந்திரமந்திரம், தேசிய தாலாட்டு - ..............................
2. மலையகமும் காரியமும், சிலோன் நெஷனல் ரிவீவ் - ..............................
3. சிங்கள அகராதியாக்கம், நையாண்டிக்கதைகள் - ..............................
4. வயலர்ஸ் வேல்ட் சஞ்சிகையின் கட்டுரை - ..............................

**(11) பின்வரும் எழுத்துக்கள் குறிக்கும் கோள்களின் பெயர்களை குறிப்பிடுக.**




A ..............................
B ..............................
C ..............................
D ..............................
E ..............................

**(12) சரியான விடையின் கீழ் கோடிடுக.**


1. வீட்டில் பலாக் கொட்டைகளை நீண்ட காலம் பாதுகாக்கக்கூடிய முறைகளில் ஒன்று.
   1. காயவைத்தல் 2. தகரத்தில் அடைத்தல் 3. அவித்தல் 4. உப்பிடல்

2. நீரில் கரையாத பொருள்.
   1. உப்பு 2. சீனி 3. குளோரின் 4. பலாக்காய்ப்பால்

3. நீரை உறிஞ்சிக் கொள்ளாத பொருள்
   1. சுண்ணாம்பு 2. செங்கல் 3. சாக்கு 4. கருங்கல்



04. சப்ரகமுவ மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள மாவட்டங்கள்.
   1. இரத்தினபுரி - பதுளை 2. கொழும்பு - கேகாலை
   3. பதுளை - பண்டாரவளை 4. இரத்தினபுரி - கேகாலை

05. 



அருகில் காட்டப்பட்டுள்ள கண்ணாடி குவளையில் மஞ்சள் நீர் ஊற்றப்பட்டுள்ளது. அதில் சவர்க்கார நீரை ஊற்றும் போது ஏற்படும் மாற்றம்.
   1. நீர் வெள்ளை நிறமாகும். 2. நீர் சிவப்பு நிறமாகும்
   3. நீர் ஊதா நிறமாகும் 4. எவ்வித மாற்றமும் ஏற்படாது.

06. தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணிகள்.
   1. ஓணான் - தேவாங்கு 2. ஆந்தை - தேவாங்கு
   3. ஓணான் - வெட்டுக்கிளி 4. மரங்கொத்தி - ஆட்காட்டி

07. கிழங்குத் துண்டுகளை நடுவதன் மூலம் வளரக்கூடியது.
   1. வள்ளிக்கிழங்கு 2. வற்றாளைக்கிழங்கு 3. மரவள்ளிக்கிழங்கு 4. கரட்கிழங்கு

08. விற்றமின் B அதிகமுள்ள உணவுகள்.
   1. தவிட்டரிசி - முட்டை 2. தவிட்டரிசி - கடும்பச்சை நிறகாய்கறி
   3. கடும்பச்சை நிறக்காய்கறியும் - மஞ்சள் நிற பழங்களும் 4. முட்டை - மீன்

09. உலர் மின் கலங்கள் (C) இரண்டும், மின்குமிழ் (B) ஒன்றும் வயர் துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக் கொண்ட உரு எது?





10. பின்வருவனவற்றுள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குரிய சின்னம் எது?

1. 2. 3. 4.


(15 புள்ளிகள்)

**(13) கணித வினாக்களுக்கு விடை தருக.**

1) 


உருவின் சுற்றளவை மீற்றரில் தருக? ..................

2) கழிக்குக. $\frac{6}{8} - \frac{2}{4} = \square$




3) அருகில் தரப்பட்டுள்ள இச்சதுரமுகியின் மேல் இது போன்ற இன்னுமொரு சதுரமுகியை இணைப்பதன் மூலம் தோன்றும் திண்ம உரு எதுவாகும்?

4) 500g பயறு 1kg 500g கடலை வாங்குவதற்கு தேவையான பணம் ரூபா 250.00 ஆகும். எனின் 250g பயறு 750g கடலை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ..............................

# யாழ்.பல்கலையில் பட்டம் பெறுவோர்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு விழா இன்றும், நாளையும் இரண்டு அமர்வுகளாக பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன. இந்த பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறுவோர் வருமாறு,



**Session-I**

**DEGREE OF DOCTER OF PHILOSOPHY**

ChandrasekarKalpana

**DEGREE OF MASTER OF PHILOSOPHY**

NavaratnamKugaparan

**DEGREE OF MASTER OF EDUCATION**

JamaldeenAbdeen, AriyaratnamAmaleswaran, SivagnanamAmbikai, MarkanduAravinthan Manickam Aripoorananathan, ArulampalamArulampigai, Vellakutty Arunakaran, RamalingamBalachandren, Balasingham Balakumar, BalasundaramBalakumar, Abraham Eleanor Thayalini, PerumalGaneshan, Victor Emmanuel Gaston Roy, Thevarajah, GraceDevadayalini, SellaiahIllango, IyavooIndrani, ArunthavarasaIndrathevy, SelvamCroos InpakumarCroos, KesavanJeevajini, Anthony Almeda Jerald, ManikkavasakanJeyaluxmy, Krishnapillai Jeyaranchi, SinnaththampyKajenthiran, KapilanKalarajani, ParamanathanKamalathasan, KandasamyKannan, Nadarajah Kanthavanachelvan, LetchumananKirupairatnam, SubramaniamKodeeswaran, LingeswaranLalitha, MuhunthanLogatharsini, MaheswaranLudevicka, TharmarajahMaginthan, ElayathambyMahadevan Ramar Mahendran, KanakaradnamMahinthan Sathiyaseelan Mangaleswary, Maria Rosario A.C, Jeyakenady Mary Magdaleen, Sivathasan Mathanamohanaraj, MuralikaranMathivathany, KachchuMohamed Mohamed Anees, SehuFareed MohamedRayees, ThurairasahMoha naraj MurukesuMohanendhiran, RasiahNithiyananthan, ArasaratnamPangayatselvan, ThanamPrabalini, MathuranayakamPrema, KiddinapillaiRajadurai, Thambimuttu Rajamanohari, PratheepanRajani, ThurairajaRamadas, Mohamed ShariffRamzeen, GaneshathevaRanjini, VairavyKandiahRaveeharan, RamadasRenuka, Bastiampillai Sahayanayaki, PonnampalamSarvananthan, Selvaratnam Selvakumar, Antony Jude Selvarajan Lambert, VelummayilumSenthan, GobalaratnamShanmugakumar, Eesan Shasegala, MaruthaiSivagnanajothy, ThuraiSivagnanams, MuniyandySivananthan, SubramaniyamSivarasa, NageswarasarmaSivasankarsarma, KumaresapillaiSivasubramaniam, ShivananthamSritharan, Thayaparan Subathini, RajaratnamSubramaniam, Varathaseelan Suganthini, BalaputhiranSugirtha, PaunanthieSujaththa, Ganesh Suseeladevi, Justin Susila, Suntharalingam Sutharsan, KiruisnasamyTharmajeelan, Sawunthis Tharmathas, ShanmugamThayaharan, GanesanThirumalalakan, YuvarajahThiyagasothy, SubramaniamThurairatnam, SriharanUmachanderan, NavatheesanUthayalatha, VadiveliahVasanthakumar, KularajahVasanthakumary, KandiahVasanthamalar, ThangarajahVasanthan, ThayaparanVasuki, KetheeswaranVennila, SivasundaramVennila, ThangavadiveluVijayakumar, Ramesh Vijitha, ArunasalamVinayagamoorthy, VijayasuntharamVinotha, SundaralingamYasotha

*IN ABSENTIA*

SrikanthanRahini, KaruneswaranRohini, KunasingamSivakumaran, AkilanVijitha

**POSTGRADUATE DIPLOMA IN EDUCATION**

ParththipanAbiramy, KumarasamyAkilan, ChivagumaarAmuthini, ThiyagarajahAtputharajah, PathmanathanBaskaran, ElayathambyGayathiri, Anthonippillai JamesMayshan, RayaseelanJamuna, SivakumarJeevaluxmy, ThevakumarJeyakala, Sivapirakasam Jeyanthan, ThuraisingamJeyathevan, KannathasKalaimagal, SomasundaramKalavanan, SaminatharKavitha, RatnasingamKokulan, JeyaseelanLankini, SevarajahMahinthan, VengadaramanaMalarvily, PremathevaManchulathevi, ThayananthanNaguleswary, Kalaichchelvan Olivathana, UthayakanthanPremala, PremkumarRajaranjini, SriskantharubanRajeswary, ThayaparanSatheeshini, ManickasingamSelvanesanSutharshan, SelliahSelvarani, KanagasabapathySenthilnesan, LohathayalanSeyarl, PonnampalamShanthanayaki, SivapackyamShritharan, KanagaratnamSivagnanam, SritharanSivarajini, ThevendranSritharan, RasiahSritharan, Atputharajah Subankini, RaguragavanSubanthini, SellathuraiSuganthiny, PonnuthuraiSuthaharan, JoiceNewton Suthershini, ThavasekarThakshayini, AinkaranThaksini, ErampamoorthyThaneswaran, MaruthaiyinarTharmaseelan, RameshanThavanithi, PararasasingamThayalan, StevanRangithTheepadevi, SivakumarThirilokasunthary, SathasivamThulasithasan, ChandramohanThushyanthy, MuraliYaaline

*IN ABSENTIA*

PunniyamoorthyGanesharajah, Thiyagarajah sJeevaratnam, GobalJeyabaliny, KugathasanPamini, NaguleswaranRasaledchumy, SomasundramSenthilraj, RajaduraiSivaganeshan, MaruthapiranSivathas, LokeswaranVanitha

**POSTGRADUATE DIPLOMA IN LIBRARY AND INFORMATION SCIENCE**

RatnasingamAhillan, SrimahadevanAnojana, SaseetharChithra, SelvavinayagamGaneshathas, KanapathipillaiJeyasothy, SuresinthiranLogambihai, SubramaniamMahiran, RajakulaveerasingamPreshani, RatnavelSevvanthy, SivanandamoorthySivashankar, NadesamoorthyThayaparan

*IN ABSENTIA*

ManikumarTharsiny

**Session-II**

**DEGREE OF DOCTOR OF PHILOSOPHY**

*IN ABSENTIA*

VairamuthuSuntharesan

**DEGREE OF MASTER OF PHILOSOPHY**

Pavilupillai Justin Jude, Rajaretnam Kiruparajah

**DEGREE OF BACHELOR OF SCIENCE IN APPLIED MATHEMATICS AND COMPUTING (VAVUNIYA CAMPUS)**

VijayasundaramKasthuri, Gangewaththe Gedara AnushaPriyangani, George Romiyal, KanatteGedara KaveeshaDamayanthiDissanayakeWijesinghe Arachchilage DineshaPrasadini Krishn athasSriranjan, Sofy JackulinAlanrose, Naseer Mohamed Rifkhan, KalugasalemThuvaragan, SubramaniyamKrishnakumar, WijekoonMudiyanseleGedaraPalindaWijekoon, Joys Merila John Baptist, SelvarathnamJayakanthan, GunasingamVathanakumar, SornalingamKarthicaa, Krishnapillai Jegatheeswaran, PooventhirarajahKobiga, Karunakaran Thusyanthan RasathuraiManoharan

**DEGREE OF BACHELOR OF SCIENCE (SPECIAL) IN COMPUTER SCIENCE (VAVUNIYA CAMPUS)**

KesavamoorthySinthuja, Gunaratnam Ann Dharshika Maria, Vinaya kavaseeharanSubaramya

**DEGREE OF BACHELOR OF SCIENCE ININFORMATION AND COMMUNICATION TECHNOLOGY(VAVUNIYA CAMPUS)**

KanagasingamAniththithan, Anne Mourine Lawrence OtoolCulas, ShanthanayagamGowsigan, ThevananthanImashala, SivapiragasamJanani, ThiyagalingamJanitha, GunarajahJency, David JenetteArulnithy, NavanesanLojenaa, MohanadasNimagini, NithiyananthamNirthika, SripathmanathanRoshany, Baladevan Sabashan, RajaratnamSenthan, SathasivamShamini, SathasivamShiyamini, SivakumaranSinthikka, SomasuntharamSuganya, SethukavalarSureka, Thangathurai Kartheeswaran, SelvarajahThuseethan, Ragunathan Thusyanthy, ArunthavavinajakamoorthyThuvaraka, ThiyagarajahVanii

**DEGREE OF BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY(VAVUNIYA CAMPUS)**

RandikaYasithAriyarathna, GihanUpendra RanasingheGunasekera, KekulandaraMudiyan selagePitiyakumbureGedaraShamini, HansamaliKekulandara, Thalaotunnage NathashaSevwandiPereraJayas undara Hewage PiumiChathurikaMadugeeDabare, Mohideen FathimaShifara, MaddumaralalageGayajith Niwanthaka Maddumarala, KirigahakotuweDushan Eranda, ThirumagalSambasivam, MathanrajSalini, HaleelurRahuman FathimaNooha, Pallewelage Hirantha Chanaka, SaranasingheEdirisooriya Dinesh Kumara, MudiyansegeKulunu PrabhathMadhubhashanSenavirathna, Jayawardana MudiyanselageMuditha VidurangaBandara, Jameel NazeehaBegam, AdikariWitharanalageUpulPriyana nda Adikari, ThusharaMadumaliChandrasekara, LewangamaKankanamalageNadeeshaUpamaliPremarathna, Rajes waranArjun, RahalaBandarawaththe GedaraNirosha Dilrukshi, HappyqueeninistaGunaratnam, IsmaLebbe MussabRasmi, BalangodaMuhandiramlageJanaka Suresh Balangoda, SooriyaArachchiMudiyanselageLakmal Mad ushankaSooriyaArachchi, Shan VyjanthaRajakaruna, Dal ugamaAcharige Don DulanAsiriDalugama, Soun dararajanKajitha, SakthivelBavatharini, Jegamohan Bridman, SivanesanNitharsan

**DEGREE OF BACHELOR OF SCIENCE IN ENVIRONMENTAL SCIENCE (VAVUNIYA CAMPUS)**

KrishnananthaselvanArjunan, Thirumal Suceendra, SuganniyaWickramapala, Abdul Muthalif Mohamed Mafalil, UdagedaraAppuhamilage Rajith RandikaUdagedara, KashinatharSomanatharSivanesan

**DEGREE OF BACHELOR OF BUSINESS MANAGEMENT (VAVUNIYA CAMPUS)**

MeragalPedeegeShanikaIshari, Kanesu Sayanthan, GanesanSriramPrasath, HerathMudiyan selage WijayanthiSudarshaniHerathAgulugaha Gamage PavithraSamanmaliGamage, Tharmarajah ClaranceSatheeshan, KarunaPedigePriyanthaKarunanayaka, KariyawasamMadakadaGamageIndikaThushara, NawaratnasamyRajasekaran, ImamdeenSaleemdeen, ArulvelselvanSivakajan, KodikaraArachchige Asoka PushpaKumari, Kiribathgodage Dona SamilaLakmali SampasivamKannathas, ThennakoonMudiyanselage DammikaSanathBandara, HerathMudiyanselage DhanushkaMadhusankhaHerath, NiranjanaRathnasothy, Annesliya Judy Soloman, PanchalingamNirosan Lalit hathmegaSaranyapuriеswaraSarma, SivatheviiThangavel, FathimaFarunas Mohamed Niyas, PerumalSriskantharaja, ArthicaLukxyTharmalingam, Ayathu Mohamed Sathira, SivakumaranNanthini, Gama GedaraIndika Bandara, SubasingheMudiyanselageSumudu PriyangikaSubasinghe, SanthakumarThurkajini Kanthasamy Vitisha, ErasanayakamPapirasa, Satchithananthasiv amSuyaniya, BalasubramaniyamKarthika, Vijayakumar Vimalakumar, RajapakshaGedaraSubhashini Ranasinghe, ThavarasaSiyamila, HappugahaKottuwe Gedara SubodhaMadhubhashaniGunawardana, JayasingheArachchigeSandyaSanjeewani, Kadawath SanjayaPathma Kumara, Mudannayake Mudiyansel age Samantha BandaraMudannayake, Theivendiram Srivanaja

**DEGREE OF BACHELOR OF ARTS (GENERAL)**

AllenpoopalasingamAnnjuliet, Sebastiampillai Annsalin, YogarajahAtchuthan, BalachandranChandrakumar, KanapathippillaiElangho, Balasubramaniyam Gayathre, ThirugnanasampantharJaamini, Kunesh waran Jasotha, SivapathasundarampillaiKalaiyaraji, PanchanathanKamaleswaran, GaneshanKapilthas, Nadaras aLojan, MariyaratnamMary Joysa, Thiruchchelvam Mathanaraj, GunapalaNilotha, SachithananthamNisanthan, ThavarajahNitharshan, PakeerathanPartheepan, SripathyPinkalai, KunasingamPuspakaran, SivapalanRavikumar, KirubananthadevanReka, VadivelRubini, Kaneshamoorthy Saranya, Joseph Sarmala, Panchachadcharam Sarvasorupy, ArulappanSebarajah Sebastiampillai Sebojiny, SinnathambyShangeetha, Kulendran Shelton MahalingasarmaSinthuja, MakendramSukirthan, KamalanathanSutharsan, ThavachchelvamThajika, Palanina thanThulasi, Kaneshapillai Vino, SebestianVirgine Roche, ShanmugaratnamVithiya, SivasaranamVithusha, Thuraichchamy Yashini, ThuraichchamyYuhasini

*IN ABSENTIA*

ThuraisingamNivetha, Kovinthapillai Piriyatharsan, SellaiahSenthuran, MankuddySuganthini

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம் பார்க்க)

## Session-III

**DEGREE OF DOCTOR OF PHILOSOPHY**

ThiahalinhamJeyamalar

**DEGREE OF MASTER OF PHILOSOPHY**

SomaskandanSuthakar

**DEGREE OF MASTER OF ARTS IN TAMIL**

SubramaniamAlvappillai, NadarajahArulmolichchelv an,
JesuthasanIgnatius, RamanathanInpathas, Vigitharan
Jenitha, ParaneetharanJeyabamini, ThavaseelanJeyan
thini, MathuranayagamJohney SweentonAnitus,
ApputhuraiKajeinthini, Sritharan Kamalambikai,
KandasamyKantharupan, ManivasagamKeerthipa,
SomasundharamKohulan, PathinathanParunanthu
KothaiBarathalosiniParunanthu, AriyaputhiranLingaraj,
SinnathambyMalini, -NanthakumarMangaleswary,
VelauthamMathiyalagan, SelvarajahMishanthy,
Thirunavukkarasu Muththarasan, VelayuthanNagulan,
Velummylum Nandakumar, SatkunrajahNigesh,
Thillainathan Nitharsanan, ParamsothyParaneetharan,
VijayaratnamRagini, RavindranathanRajani,
Santhiralingam Ramesh, AmirthalingamRanjanthasaku
maran, SuthakaranRevika, SivapathamSasikanth, Srikan
thaverlSelvaluxmy, UmakaranSemmanachelvi, Gowrees
waranSivagini, SivananthanSivaranjini, UmahkaanthanSi
vayokini, RajenthiramSooriyaku mary, KajendaranSri
bama, SubramaniamSubothiny, Shanmugananthan
Tharani, Navarathinam Thavaruban, ThanikasalamThaya
paran, Sathasi vamThiruchenthuran, Navaneethakanthan
Thirumagal, KanagaratnamThusyanthan, Thangavelu
thamVanaja, ThiyagarajahVigneswaran, Chadadcharam
Vigneswary, ThambithuraiVijayasangar

**DEGREE OF MASTER OF ARTS IN SAIVA SIDDHANTHA**

ViveganantharAmbiga, KathiraveluJeevamalar,
NithiyananthaKurukkalJegananthan, Kumarakulasi
ngamJeyamaran, KamaleswaranJeyanthy, Sivapatham
Kajendirakumar, Velauthapillai Kamaleswaran,
NavaratnamKrishnakumar, Jegathee swaraKurukkalMa
yuran, Chandrakumaran Nitharsan, ThurayappahPu
shpaleela, Vaithilingam Pushparany, ThayaparanRajani,
ThillainathanRavin dranathan, PiratheepanSangeetha,
VellaiyanSathiyanirmala, SivasuthanSelvahowry,
SomanathanSivasakthy, KandasamySritharan, Balakum
arSubasini, LingeswaranSwarnalatha, Sutharsan
Tharppana, SathiyananthasivamThavanesan, Kugathasan
Thirumaghal, ThiyagarajasarmaUmasuthan, Muruge
sapilai Vijayakumary, RamachchandranVinotharaj,
SellaiahYogeswaran, KunaratnamGobiraj

*IN ABSENTIA*
VeluppillaySivakaran

**DEGREE OF BACHELOR OF SCIENCE**

KrishnarAbilasini, JeyarajasingamApirami, Santhirasega
ramArunneru, PararajasekaramAuvai, MarkkanduElane
san, RagunathanGayathri, RajendramImayakaran,
KetharanathanJanarthan, SebastiampillaiJebarsan,
SithamparanathanJeevaganathan, PonnampalamJee
vitha, JeyaradnamJenitha, JeyarajahJeyamarino, Kumara
samyJeyapratha, Bala supiramaniyamKajananan,
AmirthalingamKajenthini, MuthulingamKalaiyalagan,
SunthararajahKapirijel, SockiahKarshini, Sivarajasund
aramKasturi, MahendralingamKeerthika, Selvanathan
Keethahan, UthayasurianKirisanthan, KanthasamyKirisha
nthy, GaneshamoorthyKirusanthan, SivabalakrishnanKo
kila, MahendrarajahKrishanthan, AiyaduraiLewbens rud,
KandasamyLogini, ThiyadoreLuxan, AnnalingamMariaja
ned, SelvanayagamMayurathan, VelauthapillaiMeera,
RamasamyMohanaruby, MurugiahMohanraj, Somasun
tharamNavaneetha, KumarasuriyarNavaneethabharathy,
Namasivayam Nilashan, RajaratnamNirujan, Nagarasa
Nishananthy, MaheswaranNitharsan, SivarajahNithiya,
Yoganan thanPaheeirathiy, VijayaratnamPaheerathan,
SuvaminathanPanchadsaran, PathmanathanParantha
man, SivananthamPathmaja, RajaratnamPavithira,
SubramaniamPirashanthy, ThavarasaPoojithreyi,
ThanabalasingamPratheep, VijayavelPriya, Kantha
thasanRagavan, RajaratnamRagavan, Kamalakkan
nanRahavan, SelvarasaRajkumar, VelummylumRa
manan, Vadivel Ramesh, ArulananthamRevathie, Nadara
jahSathiyanathan, SebastiampillaiSharth rakNiroshan,
KanagarajahSinthuja, Santhirasegaram Sinthuja,
ParamasivamSivasinthujah, Sivapakiyana thanSivasorubi,
Shanmugam Solomon, Kesavalin gamSrijanani, Sritharan
Subaragini, Thavarajah Sukirna, Pushpalingam
Surenthar, SelvarajahThar meka, SivaputhiranThasapu
thiran, Ganeshan Thavaseelan, ThurairajaThayananthi,
Sriskanthan Thenuzan, SuntharalingamThevaka,
Rathakrishnan Thurka, ArulanandamVajirana, Thavarajah
Vaseekaran, GaneshalingamVijayakanthan, Uththamaseelan
Vijayakumar, Mahalingam Vishnumeera, Sivakuma
ranVithiyathasan, VeerasinghamYalini

*IN ABSENTIA*
SanmuganathanArudselven, Antony Sahayaraj

Joseph Dinesh

DEGREE OF BACHELOR OF SCIENCE IN COMPUTER SCIENCE

DhayaparanLukshica, SomasundaramMa yooran,
SivashakthySugirthan, KrishnathasanVanaja

## Session-IV

**DEGREE OF MATER OF PHILOSOPHY**

KanagasabaiBaskaran, Moses Paheerathy

**DEGREE OF BACHELOR OF ARTS**

ArullingamAgalya, Francis Ajithra, GnanarasaAmalaje
lan, Anthony AmalathasFigurado, Rajakulendram
Anchana, KanagarasaAnitha, ThangavelAnitha,
RasathuraiAnitha, YogarajahAniththa, SoosaithasanAnj
elitaArunaPeries, SelaskiPeriesAntonetSawkarthiga,
SivaramajeyamAnuraj, YogarajahAnuseya, Arumaithurai
Anutharsini, MailvakanamApetharan, Mohanarajalingam
Aphiramy, NallathambyApiramy, KanthasamyArthy,
KaneshanArulraj, SivapathasuntharamArunja, Appasami
sarmaAswiny, ThangarajahAyngaratheepan, Rajadurai
Bakeerathy, MahendranBalathas, Niththijanantham
Baskaran, NagaratnamBiruntha, EswaranathanBrintha,
SelvarajahBrinthika, Janusiya Chandra, VenitusMirando
Chandravathani, Christy Rajah ChrishanaKeerthika,
Anton ChristiyanAruljeevan, Alfred Daniiel Joseph ,
VannamyilDayani, NamasivayamDisanthini, Sivakumar
Dishani, VarnakulasingamEnastina, Shanmugasundaram
Ganghaa, KirishnamoorthyGowreeswary, Ragunathan
Gowthamy, BalachandranHemapriya, ArulanantamIma
culacia, JesuthasanIthayaraja, SubramaniyamIthayatha
rsiny KanthasamyJamuna, KanakasuntharasuvamiJana
meyajanth, NavarajahJanarthanan, SosaiEmilianus
JaneCanisiya, AmirthanatharJeenkarthiga, JeyaseelanJega
tha, KunaraththinamJensiya, JaccovunJesunesanCroos,
Antony George Jeyanthi Malar , AllerajaJeyaruby,
SupramaniyamJeyavathani, Lucas Sosai Jude Mary
Jeyalet, NithiyananthanKagitharan, Sivasubramaniam
Kajana, KanesanKajani, ManikkamKajanthini,
BalakrishnanKajendren, KanagalingamKalaivathany,
BalasundaramKalpana, ThangavelKalyani, Mahendran
Kantharuby, VanniyasingamKapilan, NagarasaKarthika,
SivarasaKarthika, RasapathamKarunanithy, Parara
sasingamKasthury, SivasupramaniyamKayalvily,
GnanasingamKeethaviny, SinthathuraiKirubakaran,
PakiyanathanKirubalini, John MariyathasKirutharshan
Nicholas , SomasekaramKobika, ShankaranKokilavatha
nan, AnnalingamKopika, AlakanKowsalya, Somasun
daramKowshika, KunaratnamKunaja, KunasekarKuveny,
MeiyalakanLalitha, ArunthavarasaLavani, ThaveethuLu
kshanNeethirajah, NamasivayamLuthepa, James
Luxman Lambert , PararajasingamMajuran, Kandasamy
Manokary, Rubasinkam Marine Shanka, Nagenthiram
Mary Bastian, Mariyathasan MaryDorinCroos, Francis
MaryJenilucksia, Pavulinappar MaryJustina, Mylvaga
namMariyanayagam Mary Piratheepa, Mariyanayagam
Mary Sibila Silva, ArulthasMarydena, Arumailingam
Mathivathani, JeyasingamMathuranthy, Christy
RajantheraMayuran, MahenthirathasMayurathy, Raveend
rakumarMeera, RajathuraiMenaka, ThavendranMenaka,
KandasamyMenaka, AlosiousMerinlaksala, Sebastian
MichealFerosanCulas, MahalingamMohanapiriyan,
ThangarajahMowliya, AmirthalingamNalayini, Thei
vendranNarmatha, ThilakarajanNarmatha, JeyarasaNa
thees, VaratharasaNavaneethan, Shanmuganathan
Neeraja, PuvaneswaranNerinthan, MahathevanNilojana,
ShathasivamNilojini, Stalin George Nimalsiny,
PeramiyaNiranjany, RagunathanNirojini, Pararajasingam
Nirojini, KirishthurajaNirosha, BalasuntharamNiroshini,
RajakopalNisha, KrupananthanNishanthan, Sivagna
namNishanthini

Benjamin Delisha, KrishnarajahGopiga, Manikkavasa
karJenaraththiny

**DEGREE OF BACHELOR OF SCIENCE IN AGRICULTURE**

ThavarasaAbiramy, UthayaratnamArchana, Sella
thuraiArjana, VelauthamBama, SuntharalingamBanusha,
Bernard ChristaCharlini, SatchithananthapillaiGobika,
ThangavadivelGogila, TharmaratnamGopikeetha,
PerinpalingamJeevaki, SinnarajahKajaththiri, Kulasi
ngamKajavarnan, KulasingamKajenthiny, Kandasamy
Kanchchana, SivalingamKarthika, KrishnasamyKasthani,
ThuraisingamKayathiri, ThanarajKeerthiga, Kanagara
tnamKeerthika, SoosainayagamLuxonReval, CelastinThi
ruchelvam MaryAnchala, KasinatharMathaniga,
MaheswaranMayoora, KantharajahNithilan, Nadarajah
Niththiya, AnandarajahPiragalathan, Panneerchelvam
Priyatharshny, SriharanRaguraj, SivanesalingamRanjani,
VeluppillaiRatha, ParamsothyRohini, JoshepkumarSan
geetha, NadarajahShalini, LokanathanShanjeevan,
SuwarnarajahSharuby, KamalachchandranSinthika,
SivananthamSinthuja, SivarajahSinthuja, Kanesa
pillaiSuren, MahendranSutharshiny, SatgunamSwarna,
RamajeyamThaksika, SingarasaTharjiny, Thirunavu
kkarasuTharmini, RatnarajahTharsika, Arulanantham
Tharsiny, KandasamyThatchayini, KanthasamyThavaru
ban, NaguleswaranVigitha, JeyarajahJanardrajh, Thomas
Osan

(சனிக்கிழமை பட்டம் பெறுவோர்)

## Session-V

**DEGREE OF Doctor OF PHILOSOPHY**

David Vincent Patrick

**DEGREE OF MASTER OF PHILOSOPHY**

Rajakumar Navamany, Sathyaruban Sutharshiny

*IN ABSENTIA*
William Shanthakumar Thulasitha

**DEGREE OF BACHELOR OF MEDICINE AND BACHELOR OF SURGERY**

Sachchithananthan Abalaayan, Kugananthan Abarna,
Rajasingam Ajanthan, Ravi Ajanthini, Robert Anton
Allen Suramiya, Arichandran Aravinthan, Naguleswaran
Aravinthan, Francis Xavier Christy Denyraj, Refuge Claude
Andrew Arunan, Nagarasa Ealily, Kumarakulasingam
Gajanthini, Ganeshamoorthy Gayathri, Maheswaran
Gopisanth, Yoganathan Gowrinesan, Vythilingam
Inthujan, Thavarajah Janani, Paramsothy Jananthan,
Ganeshalingam Jathavani, Thatparasuntharam Jeisun
thar, Sebastian Jesu Thayalan Dias, Johnsingam Johnpi
ragash, Thanabalasingam Kabilan, Paramsothy Kalaima
ran, Pushpana Kamalathasan, Selvanayagam Kirushan
than, Ranganathan Kogulanath, Karunaraj Krishanth,
Sivayogam Kumaran, Perampalam Malini, Kandiah
Manitheepan, Ratnarajah Mario Maznet Theepan, Gane
shamoorthy Mathananayanan, Jeyakumar Mathura
njany, Yogarajah Muralitharan, Ketheeswaran Nisan
thiny, Kiritharan Nisha, Sathananthanayagam Pavatha
rani, Ganeshalingam Pratheepan, Balasunderam Prathee
shka, Jeyarajah Rajeevan, Sivalingam Rajivraja, Suthen
dran Roeshanthan, Seevaamirtham Rushanthini,
Velayutham Sarangan, Thillaiyampalam Sarmila,
Tharmakulasingam Serujanan, Thavapalan Shayshana
nth, Selvaratnam Shobika, Kanesamoorthy Shribavan,
Kanesharatnam Sinthujani, Balaraja Sivakanth, Kanagara
tnam Sivasuthen, Vairavanathan Sivatharushan,
Mahendrarajan Sobana, Suntharamoorthi Sugirtha,
Kanagasingam Sujitha, Ramachandra Tharsha, Moha
nathas Tharshiny, Balasingam Thileebphan, Pathmana
than Tishanthan, Balachandran Umaginy, Sivarajah
Ushjenthan, Katkandu Uthayaseelan, Kanthasamy
Vaseekari, Mahalingam Vatoothayan, Yoganantham
Yogatheepan

*IN ABSENTIA*
Atham Usainar Abdul Samad, Neethirajah
Devakumar

**DEGREE OF BACHELOR OF FINE ARTS (ART & DESIGN)**

Joseph Carmel , Selvarajah Gajenthera, Manoharan
Inthunesan, Nagulathasan Jeyathas, Alfered Johnsan
Ananthatheepan, Thavayogarajah Mayurathan,
Yogarajah Nirojini , Rasaraththinam Nishanthini,
Radnasingam Partheepan, Ganeshamoorthy Prasanna,
Mahathevan Ragunathan, Mahendran Sakthyakala,
Shandrathasan Sarmala , Kandiya Sasivathani, Kaliya
moorthy Tharsini, Mahendran Thushanthan, Srikara
rajah Vakeesan, Kumarasamy Vijikaran, Shandiran
Vijitharan, Sivarajah Vimalathas, Pathmanathan Vithusan

*IN ABSENTIA*
Tharmaradnam Arulalakan, Kanapathy
Pakkiyaraj, Thuraiaiya Ratheepan

**DEGREE OF BACHELOR OF ARTS**

Balakrishnan Ahilan, Perampalam Ajanthini,
Panchadcharam Anitha, Sivapalan Archuna , Nichilapillai
Brigit Niroja, Nadarashasuntharam Dishani, Sockalingam
Gowthamy, Elankanathan Inthumathy, Sivayoganathan
Jesalini, Velautham Kabilan, Shanmuganathan Kajend
ran, Sivarajah Kalainitha, Selvaratnam Kalaivani, Rajara
tnam Kalpana, Arumainayagam Karthika, Kanagalingam
Kirijakumary, Niththiyarangithan Kirishanth, Rasathurai
Kishanthy, Ratnasabapathy Kurukkal Kohilavani,
Jeyabalasingam Kuganya, Anthonippillai Mary
Maristala, Vinayagamoorthy Mathivathany, Tharmalin
gam Mathura, Sivapalasegarampillai Mathusha, Santhan
Mercy Thanuja, Selvarahsa Mithula, Thavachselvam
Nagula, Nadarajah Nalayini, Ravithasan Nigas,
Theventhiran Niranjana, Disskantharaja Niranjanaa,
Thirugnanasampanthar Nirojini, Sivanantham Nirosa,
Balasubramanijam Nirosha, Muththuthamby Niththiya,

(மிகுதி நாளை)

# ஆங்கில மொழிமூலமான விவாதம் மாணவரிடையே நடத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழிமூலமான விவாதப் போட்டிகளை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலைகளின் ஆங்கிலத்துறைக்கு பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் கல்வி வலயங்களின் ஆங்கில பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

அங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர்,

வழமையான ஆங்கிலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு தொடரப்படுகின்ற அதேவேளை, ஆங்கில விவாதப் போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்தவிருக்கிறோம். இது எல்லா மாணவர்களையும் உற்சாகப்படுத்தும்.


மொழித்திறமையுள்ள மாணவர்கள் விவாதங்களில் பங்குபற்றுவதை ஏனைய அனைத்து மாணவர்களும் பார்ப்பார்கள். அதன்மூலம் தாமும் மொழியில் முன்னேற்றம் காண்பதற்கு முயற்சிப்பார்கள்.

பார்வையாளர்களாக இருக்கும் மாணவர்களையும் ஆங்கில விவாதப் போட்டிகளில் பங்குபெறச் செய்வதற்கு தொடர்ந்து வரும் காலங்களில் ஆசிரியர்கள் பயிற்சியையும், வழிகாட்டலையும் வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விவாதப் போட்டிகளை ஒழுங்குபடுத்துமாறும் இதற்கான நிதி, போக்குவரத்து, தங்குமிட வசதிகள் முதலிய அனைத்து ஒழுங்குகளையும் வடமாகாண ஆளுநர் செயலகமே கவனிக்கும் என ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் சுட்டிக்காட்டினார்.

ஆங்கில விவாதப் போட்டிகளை ஒழுங்குசெய்து நடத்துவதற்கு பல்வேறு கல்லூரிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயற்குழுவொன்றும் அங்கே தெரிவுசெய்யப்பட்டது.

# அமெரிக்க தூதரகம் முன்றலில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

கொழும்பு கொள்ளுபிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

கொழும்புக்கு பயணம் மேற்கொண்டுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பான விடயங்களை ஆராயும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்டீபன் ஜே.ரப்பை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கொள்ளுபிட்டி சந்தியில் இருந்து பேராணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னர் நின்று கோஷம் எழுப்பினர். இந்தப் பேரணியில் பௌத்த பிக்குமார் உட்பட 500 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் எழுப்பியுள்ளனர். விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிக்க அமெரிக்கா முற்படுவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குற்றம் சுமத்தியுள்ளனர்.

# பாடசாலைக்கு அதிபர் இல்லை; பெற்றோர் திரண்டு போராட்டம்



(வவுனியா)

வவுனியா, முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒருவருட காலமாக அதிபர் பதவியில் வெற்றிடம் நிலவுவதாகவும் விரைவில் அதிபரொருவரை நியமிக்குமாறு வலியுறுத்தி பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஒரு வருடமாக இப்பாடசாலையில் நிரந்தரமாக அதிபர் நியமிக்கப்படாத நிலையில் பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு சிதைவடைந்துள்ளதாகவும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு போதுமான ஆசிரியர் இல்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இப்பாடசாலையில் அதிபர் இன்மையானது தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையை பாதிப்பதாகவும் தரம் ஐந்து மாணவர்களுக்கு ஆசிரியர் இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும், கணித பாட ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் இதுவரை அவ்விடத்திறகு புதிய ஒருவர் நியமிக்கப்படவில்லை எனவும் பாடசாலையின் போதிய வளங்கள் இல்லாமையினால் பாடசாலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் வட மாகாண கல்வி அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் இதுவரை அதிபரை நியமிக்கவில்லை எனவும் குற்றஞ் சாட்டினர்.

இதேவேளை ஏற்கனவே வட மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் இப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடிய போதிலும் அவர்களும் ஆக்கபூர்வமான பதிலை வழங்காத நிலையிலேயே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தனர்.

"வடமாகாண கல்வி அமைச்சரே அதிபரை நியமித்து மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு ஊக்கமளியுங்கள்", "அதிபரை நியமிக்க ஒரு வருடம் தேவையா?", "அதிபர் இன்றி நிர்வாகக் கட்டமைப்பு சீரின்றியுள்ளது" என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, ஒரு வாரத்துக்குள் இப்பாடசாலைக்கான அதிபர் ஒருவரை நியமிப்பதாக எழுத்து மூலமாக உத்தரவாதம் அளித்ததன் பின்னர் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

## நீதிமன்ற...

நிகழ்வில் கலந்துகொண்டவர்களால் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

இதன்பின்னர் ஊர்காவற்றுறையில் 127 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியும் நேற்று மாலை 3.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ் உட்பட நீதி நிர்வாகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## அமெரிக்காவின்...

அலுவலகத்திற்கும் ரெப் விஜயம் செய்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிஸனும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டார் என்று அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட யுத்த சூன்ய வலயத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பொதுமக்கள் அகப்பட்டிருந்தனர். யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் யுத்த சட்டங்களை மீறுவதாக மனித உரிமை கண்காணிப்பகம் 2009 ஆம் ஆண்டு அறிவித்திருந்தது.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட மிகவும் ஒடுங்கிய பகுதியான யுத்த சூன்ய வலயத்தில் அகப்பட்டுள்ள பொதுமக்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு புலிகள் தடுத்துவருகின்றனர்.

அதேவேளை அரசாங்க தரப்பினர் அந்த பகுதியில் திரும்ப திரும்ப கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் அவ்வமைப்பு அப்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விண்வெளி...

கல்வி கற்று வருகின்றார்கள். செயற்கைக் கோளை விண்வெளிக்கு ஏவுவது, விண்வெளியில் இருந்து நில அளவை செய்வது, என பல்வேறு துறைகளில் சுமார் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

இவர்களில் அதீத திறமை மிக்க 2 மாணவர்களை விண்வெளிக்கு அனுப்ப பிரித்தானிய விண்வெளி ஆராய்ச்சி மையம் முடிவெடுத்துள்ளது.

அதில் மிகத் திறமையாக சித்தியடைந்துள்ளார் பிரித்தானியாவில் வசிக்கும் தமிழ் மாணவி. அவர் பெயர் சிவேன் ஞானகுலேந்திரன். இந்த மாணவி நுண்ணியல் உயிர்களைப் பற்றி நன்கு கற்று திறமை பெற்றிருக்கிறார். அத்தோடு அவர் விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நியமனங்களை...

பட்டமை தொடர்பில் உள்ள முறைகேடுகள் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கமைவாக மாகாண சபையினால் நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்படுவதாகவும் இது குறித்து மீள்பரிசீலிக்கப்பட்ட பின்னர் முடிவுக்கு வரமுடியும் எனவும் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ)

## இஸ்ரேல்...

அமைதியை கொண்டு வந்த மிகப் பெரிய தலைவர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாராட்டியுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் மக்களின் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் சிறிய சாதனை அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட விரோத போக்கு மற்றும் வன்முறையை அனுபவித்த மக்கள் என்ற வகையில் சமாதானத்தை கொண்டு வருவதில் உள்ள சிரமங்களை நன்கு அறிந்துள்ளதாகவும் பெரஸ், மகிந்த ராஜபக்ஷவிடம் கூறியுள்ளார்.

பெரஸ் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் ஒரு வசீகரிக்கும் சாதனை தலைவராக இங்கு வந்துள்ளீர்கள். அமைதியின் பலனை எதிர்பார்த்து இரவுகளையும் நாட்களையும் சிந்தனையையும், மனத்தையும் முதலீடு செய்துள்ளீர்கள்.

அமைதியையும் நல்லிணக்கத்தையும் தேடி இந்த பிராந்தியத்திற்கு வந்துள்ளீர்கள். இஸ்ரேலும் சமாதானத்தை கொண்டு வரவே முயற்சித்து வருகிறது என்றார்.

அதேவேளை இங்கு கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கை சகல மக்களின் அமைதிக்காகவும் ஆதரவு வழங்கி வருகிறது.

பயங்கரவாதிகளுடான 30 வருட போருக்கு பின்னர் கடந்த 5 வருடங்களாக இலங்கை மக்கள் அமைதியை அனுபவித்து வருகின்றனர்.

பயங்கரவாதத்தை ஒழித்து குறுகிய காலத்தில் பொருளாதார ரீதியாக வெற்றிபெற முடிந்துள்ளது.

தடுப்புக் காவலில் இருந்த 14 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிறுவர் போராளிகள் உட்பட சகலரும் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்றார் ஜனாதிபதி.

## மாகாண...

என்பதற்காக ஆங்கிலத்தில் பேசினீர்கள். ஆனாலும் தமிழில் உரையாற்றி விட்டு பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

நீங்கள் அவுஸ்ரேலியா செல்வதாக கேள்விப்பட்டோம். இருப்பினும் திரும்பி வந்து எங்களுடன் இணைந்து சேவை செய்ய முன்வந்துள்ளீர்கள். இதை நாம் வரவேற்கின்றோம். இளைஞர் சமுதாயத்தின் சிறந்த தலைவர்களில் நீங்களும் ஒருவர்.

எம்முடன் உள்ள இளம் தலைவர்களுடன் இணைந்து எதிர்கால இளம் சமுதாயத்தினரின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் நீங்கள் உழைக்கவேண்டும் என வாழ்த்துவதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜனை வாழ்த்தினார். (இ)

## அதிகாரப்...

கையளிக்கப்படும் என எமக்கு இலங்கை அரசால் உறுதியளிக்கப்பட்டது.

இலங்கை இறைமையுள்ள நாடு. தமது நாட்டைப் பற்றி அவர்களே தீர்மானிப்பர். 13 ஆவது திருத்தம் இலங்கையிலுள்ள தமிழர் மற்றும் வேறு இனங்களுக்கும் கௌரவத்துடன் வாழும் உரிமையை வழங்கும் என எமக்கு உறுதியளிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# அடையவேண்டிய இலக்குகள் ஏராளம்;

# பேதங்களை மறந்து இணைந்து செயற்படவேண்டும்



(யாழ்ப்பாணம்)

எம் மக்களின் சொந்த காணிகள் இன்னும் அந்த மக்களிடம் இல்லை மக்களின் காணிகளை மக்களுக்குரிதாக்க வேண்டும் இதற்காக அனைவரும் அரசியலுக்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வரம் பிரதேசத்தில் ஜ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையில் அவுஸ்ரேலிய அரசின் 23 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சந்தை கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

நாங்கள் அடைய வேண்டிய இலக்குகள் ஏராளம் இருக்கிறன. மீள்குடியேற்றத்தில் நாங்கள் இலக்குகளை அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது. இதில் அரசியலுக்கு அப்பால் எல்லோரும் சொந்த மண்ணை மீட்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கின்றோம். இங்கே மக்களுக்குரிய நிலங்கள் மக்களிடம் இல்லை அதை மீண்டும் மக்களுக்குரியதாக மாற்ற வேண்டிய பொறுப்பை நாங்கள் சுமந்திருக்கின்றோம்.

அண்மையில் யாழ்ப்பாணம் கச்சேரியில் மீள்குடியேற்ற அமைச்சருடனான சந்திப்பின் போது இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களை வேறு இடங்களுக்கு மீள்குடியேறுவது அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவது போன்ற கதைக்கே இடமில்லை என்று வலியுறுத்தியிருக்கின்றோம். அந்த மக்கள் அவர்களுடைய சொந்த இடங்களிலேயே மீள் குடியேற வேண்டும். அதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதனையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம். எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக பொறுப்பேற்க விருப்வரை நான் நேற்றுமுன்தினம் சந்தித்தேன். அப்போது அவரிடம் கூறினேன். நீங்கள் ஒரு சவாலான பொறுப்பை கையில் எடுத்திருக்கின்றீர்கள். யாழ்ப்பாண மக்களை வெல்வது என்று சொன்னால் நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்தாமல் வெல்ல முடியாது என்பதை நான் அவருக்கு தெளிவாக கூறியிருந்தேன். மாற்றத்தை ஏற்படுத்தினால்தான் நீங்கள் யாழ்ப்பாண மக்களை வெல்ல முடியும். அல்லது தோற்றுப்போவீர்கள் என்று சொல்லியிருந்தேன். அப்போது அவர் சொன்னார் உங்களது எல்லோருடைய ஒத்துழைப்புடனும் அந்த விடயத்தை நிச்சயமாக சாதிப்பேன் என்று.

நாம் வன்னியிலே மீள்குடியேற்றம் செய்தோம். அங்கே ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 95 வீதமான மக்கள் மீள் குடியேறுகிறார்கள். வலி வடக்கில் அவ்வாறான நிலைமை இல்லை. இருப்பினும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நாம் பூர்த்தி செய்வோம் அது எங்களின் பொறுப்பு குறிப்பாக இந்த பிரதேசத்தின் சில பகுதிகளுக்கு மின்சாரம் இல்லை எனவும் வீதிகள் மோசமாக இருப்பதாகவும் அதனை நிவர்த்தி செய்து தருமாறு வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே மின்சாரத்தை வழங்குவதற்கு நான் வடக்கின் வசந்தம் மின் பொறியிலாளருடன் கதைத்து அடுத்த வாரமே மின் வழங்குவதற்குரிய திட்ட மதிப்பீடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். ஏனைய உட்கட்டுமானப்பணிகள் தொடர் பிலும் கவனம்செலுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்

இந்த நிகழ்வில், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ஸ்ரீமோகன், வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன், வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் அறிவரசன், வட மகாண ஐ.ஓ.எம் நிறுவன இணைப்பாளர் வேதாரணியம், வலி.வடக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவ்ர் பாலசிங்கம் (அன்பு), தெல்லிப்பளை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சிவகுமாரன், வலிகாமம் தெற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் வலன்ரையன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வடபகுதி அரச திணைக்களங்ளில் முதலமைச்சரின் புகைப்படம்

### நிறைவேறியது தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களில் முதலமைச்சரின் படங்கள் காட்சிப்பத்தப்படுவதுடன், துறை சார்ந்த திணைக்களங்களில் மாகாண அமைச்சர்களின் படங்களும் காட்சிப்படுத்தப்படவேண்டும் என்று நேற்று இடம்பெற்ற மாகாண சபை அவர்வின்போது அன்ரனி ஜெயநாதனினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

ஒவ்வொரு அரசாங்க நிர்வாகங்கள் அல்லது காட்சிகள் மாறும் போது அதன் தலைவரின் படங்களை இலங்கையின் சகல காரியாலயங்களிலும் காட்சிப்படுத்திக்கௌரவிப்பது ஒரு மரபாக இருந்து வருகிறது. வடமாகாண சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட காரியாலங்களில் முதலமைச்சரின் படத்தினை காட்சிப்படுத்தாமை ஜனநாயகத்தெரிவையும், மரபையும் மீறும் செயலாகும் எனவே வடக்கில் சகல காரியாலங்கள், திணைக்களங்களில் உடனடியாக முதலமைச்சரின் படத்தைக்காட்சிப்படுத்தும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ)

## யாழ்.மாநகரசபையில் முறைகேடு; விசாரணைசெய்ய ஆணைக்குழு

### மாகாணசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் முறைகேடான நிர்வாகம் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படுவதுடன், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் மீது புகார் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவற்றுக்கும் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் நேற்று நிறைவேற்றப் பட்டது.

வடமாகாண சபை அமர்வில் இப்பிரேரணை கொண்டுவரப் பட்டது. அரசியல் தலையீடுகள் அற்ற சுயாதீன விசாரணை ஆணைக்குழுக்கள் தனித்தனியே உருவாக்கப்பட்டு புகார் அளிக்கப்படும் பிரதேச, நகர, மாநகரசபைகளின் கடந்தகால நிர்வாகம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் விவாதத்திற்கு கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ)

## படைக்கல சேவிதர் மயக்கம்; மாகாண அமர்வில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்ற வேளையில் படைக்கல சேவிதர் மயக்கமடைந்து வீழ்ந்தார்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான வடமாகாண சபை அமர்வில் செங்கோலுடன் அவைத் தலைவரை பேரவைக்குள் அழைத்துச் சென்று செங்கோலை பீடத்தில் வைத்துவிட்டு அவைத் தலைவரருகே நின்றுகொண்டிருந்த படைக்கல சேவிதர் காலை 11 மணியளவில் திடீரென மயக்கமுற்று கீழே விழுந்தார்.

மாகாணசபை ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் உடனடியாக முதலுதவி அளித்ததைத் தொடர்ந்து மயக்கம் தெளிந்து உடல் தேறினார். அவ்வேளை பேரவைக்குள் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. (இ)

## றெக்சியன் கொலை வழக்கு; கமலேந்திரனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரனை, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

## கனேடிய எம்.பி.யின் நடவடிக்கைக்கு கண்டனம்

(கொழும்பு)

சர்வதேசத்தில் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் முயற்சியில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு விஜயம் செய்த ராதிகா சிற்சபேசன், நெருக்கடிகளை எதிர்நோக்கியதாகத் தெரிவித்து, அரசாங்கத்திற்கு எதிராக அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாக உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

சிற்சபேசன் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு விஜயம் செய்ததால் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிற்சபேசன் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் அதிகாரிகள் மிகவும் நாகரீகமான முறையில் நடந்து கொண்டதாகவும், சிற்சபேசன் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை எனவும் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கனடாவில் உள்ள தமிழர்களிடம் வாக்கு சேகரிக்கவே ராதிகா சிற்சபேசன் இலங்கை வந்து வட பகுதி மக்களை சந்தித்தாக அரசாங்கம் ஏற்கனவே விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திரட்டப்படுகிறது கைதிகள் விபரம்

(கொழும்பு)

சிறைச்சாலையிலுள்ள தூக்குத் தண்டனை கைதிகள், ஆயுட் கைதிகள் மற்றும் நீண்ட நாள் தண்டனை அனுபவிக்கும் கைதிகள் தொடர்பான அறிக்கையொன்றை தயாரிக்குமாறு. சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர், சிறைச்சாலை ஆணையாளருக்கு பணித்துள்ளார்.

தங்களுடைய தண்டனை நிறைவேற்றுமாறும் அல்லது விடுவிக்குமாறும் கோரி போகம்பரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தூக்குத்தண்டனை கைதிகள் ஆயுட்கைதிகள், அடங்கலான 27 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாமல் ராஜபக்ச எம்.பி.யின் தலையீட்டையடுத்து இவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தநிலையில், நாடு முழுவதும் உள்ள சிறைகளில் உள்ள இவ்வாறான கைதிகளின் விபரங்கள், தண்டனை அனுபவிக்கும் காலம் அடங்கலான சகல விபரங்களும் அடங்கிய அறிக்கையொன்றை தயாரிக்க நடவ்டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண சபையில் புதிய செங்கோல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைக்கு புதிய செங்கோல் நேற்று எடுத்துவரப் பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய கலாசார அம்சங்களை வெளிக்காட்டும் வகையிலும் சிறந்த கலைத்துவமாக செங்கோல் அமைக்கப்பட்டுள்ளது.

பூவரசு, பனை, கருங்காலி, மஞ்சள்உண்ணா, வேம்பு என்பவற்றால் மிகச்சிறப்பான முறையில் சபையின் ஏகோபித்த ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் ரூபா வரைக்கும் இதற்கு செலவிடப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (இ)

## முகத்தில் பாய்ந்தது ஈட்டி; பயிற்சியின்போது விபரீதம்

(எம்பிலிபிட்டிய)

எம்பிலிபிட்டிய பகுதியை சேர்ந்த பாடசாலையொன்றில் ஈட்டி எறிதல் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு மாணவனின் முகத்தில் ஆறு அங்குலத்திற்கு ஈட்டி புதைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எம்பிலிப்பிட்டிய, பனாமுற வித்தியாலயத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் பிரிதொரு மாணவன் வீசிய ஈட்டி கயான் மதுசங்க என்ற மாணவ தலைவனின் முகத்தில் இடது பக்க கண்ணுக்கருகில் பட்டு உற்புகுந்துள்ளது.

உடனடியாக முகத்தில் உள்ள ஈட்டியுடன் மாணவனை எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச்சென்ற வேளையில் அங்குள்ள வைத்தியர்கள் ஈட்டியின் ஒரு பகுதியை மெதுவாக வெட்டி அகற்றியுள்ளனர். உட்புகுந்த மிகுதி பகுதியுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு குறித்த மாணவனை அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.